
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
10
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்

# பாகம் - 10

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்.

# என்னுரை

“இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்” என்ற நூலின் பத்தாவது பாகம் இது. பத்துப்பாகங்களும் இந்து மதங்கள் சொன்ன தத்துவங்களை இலகு தமிழில் கூறுவன.

இறைவனாலும், மஹாபுரிஷர்களாலும், ஞானிகளாலும், பெரியவர்களாலும் இந்துமதத்திற்கென அருளிய இந்து தத்துவங்களை இலகுவில் அறிந்துகொள்ளவதற்காக இப்பத்துப் பாகங்களையும் எழுதினேன்.

வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, திருமந்திரம், கந்தபுராணம், பெரியபுராணம், திருக்குறள், போன்ற அரிய பலநூல்களின் அரிய கருத்துக்களை இன்றைய இளைஞர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும் என்பதே இப்பத்துப் பாகங்களின் நோக்கமாகும்.

இந்து தத்துவங்களைப் படித்த பின் அதன் தத்துவங்களை எமது சமூக மாந்தரின் இயல்புகளுடன் ஒப்பிட்டு நோக்கினேன். அதன் வெளிப்பாடுகள் தான் இந்நூல்கள்.

இந்து தத்துவங்கள் மிகவும் அற்புதமான கருத்துக்ளைக் கூறியபோதும் அவை சாதாரண மனிதர்களுக்கு விளங்காதவையாகவே இன்றும் இருக்கின்றன. வேதம் கற்ற பண்டிதர்களும், ஞானிகளும், தவசிகளும், முனிவர்களுமே அதன் பயனை அனுபவித்து வருகின்றனர். என்ற கருத்து இந்து தத்துவங்களைக் கற்றும் புரிந்து கொள்ளாத மக்களிடம் இன்றும் இருக்கிறது.

அதனால் தான் நான் இந்து தர்மங்களைக் கற்று அதை அனைவரும் புரியும்படி எழுதினேன். எனது அனுபவங்களையும், எனது வாழ்க்கையில் ஏற்பட்ட இன்ப துன்பங்களையும்

உதாரணங்களாகக் காட்டியுள்ளேன். பெரும்பாலான தத்துவங்களுக்குக் கதைகள் எழுதியுள்ளேன்.

இதற்குமுன் ஆத்தி சூடிச் சூத்திரங்களுக்கு கதை எழுதினேன்.

திருக்குறள் பாக்கள் 1330 இற்கும் கதை எழுதினேன்.

பகவத்கீதைச் சூத்திரங்களுக்கும் கதை, விளக்கம், உரை என்பன எழுதினேன்.

அவற்றைக் கற்றமையால் இந்து தத்துவங்களில் புதைந்துள்ள அரிய கருத்துக்கள் பலவும் எனக்கு விளங்கின.

அதன்பயன்தான் இந்தப் பத்துப் பாகங்கள்.

என்னால் முடிந்தளவு கருத்துக்களை எழுதியுள்ளேன். இன்னும் எவ்வளவோ இருக்கும். அவை அவ்வப்போது நூல்களாக வெளிவரும்.

இப்பத்து நூல்களைப் பற்றிய விமர்சனங்களையும் யாராவது எழுதினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.

இப்பத்து நூல்களையும் ஒப்புநோக்கி பிழைகளை நீக்கித்தந்த ஆசிரிரைய செல்வி இறைமகள் பரநிருபசிங்கம், ஓய்வுபெற்ற அதிபர் திரு. வா. ஜெயரத்தினம் ஆகியோருக்கும், இதைக் கணனி மயப்படுத்தித் தந்த செல்வி. க. தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூல்களை விமர்சனம் செய்தவர்களுக்கும், இப்பத்து நூல்களையும் வெளியிடும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

அன்புடன்,

கே. வி. குணசேகரம்.

பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வித்துறைப் பேராசிரியரும்,
தேசிய கல்வி நிறுவக ஆலோசகருமாகிய
பேராசிரியர், கலாநிதி, இராமநாதன் சாந்தன் துீ
டீ.யு (ர்ழளே)இ டீ.நுன (ர்ழளே)இ ஆ.யுஇ ஆீ.ாடைஇ ீா.னு(நுன)இ ீா.னு ீ.யுனு)

## அவர்கள் வழங்கிய,

# "இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்" என்ற நூல்களுக்கான விமர்சன உரை.

நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் அவர்கள் எழுதிய "இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்" நூலாக வெளிவருவது மட்டற்ற மகிழச்சியைத் தருகிறது.

இறைவனுடைய அருளால் மதங்கள் தோன்றின என்பது பொதுவான நம்பிக்கை. இறைவன், மெய்ஞானம் பெற்ற அருளாளர்களுக்குத் தரிசனம் தந்து அவர்களுக்குத் தந்த உபதேசங்கள் மதங்களாக அமைந்தன என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

இவ்வாறு தோன்றிய எல்லா மதங்களின் குறிக்கோள்களும் ஒரே இலக்கை நோக்கிச் சென்றாலும், அதன் அடிப்படையான அமைப்பு முறையில் பல மாற்றங்கள் உண்டு. இந்து மதக்கொள்கைப்படி மனிதன் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன். அவன் தன் தேவைக்கேற்ப உலகில் உள்ள பொருட்கள் எல்லாவற்றையும் உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றைத் தன்நலம் கொண்டு அழிக்கச் சுதந்திரம்

இல்லை. தர்மம் அவனைக் கட்டுப்படுத்துகின்றது; வழிநடத்துகின்றது. இந்து மதத்தின் நல்லியல்புகள், நல்லொழுக்கங்கள் இவை மனிதனுடைய தினசரி வாழ்வின் அடிப்படையாக இரண்டறக் கலந்ததாகப் பிரிக்க முடியாத படி சேர்த்துத் தரப்படுகிறது. அதனால் தான் இந்து மதம் ஒரு வாழ்க்கை முறை, ஓர் உன்னத நிலை என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

இவ்வாறு இறைவனருள் வாய்கப்பெற்ற திரு. கே.வி. குணசேரகம் அவர்கள் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெரும் சிந்தனையோடு இந்து மதத்தின் மகிமையைத் தக்க உதாரணங்களோடு எடுத்துக்காட்டி இந்நூலைகளை எழுதியிருக்கிறார்.

சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாட்டையே “பண்பாடு” என்று கூறலாம். இந்து தத்துவம், இந்து சமயம், இந்துக்கலைகள் ஆகிய இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகள் உணர்வுபூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும், பரப்புரை செய்யப்படுமானால் இந்து மக்களிடம் காணப்படும் பல்வேறு குழப்பங்கள் தீரும். மனம் தெளிவடையும். இந்துப் பண்பாடானது புறக்கோலத்தில் அழகையும் அமைதியையும் காணும் அதே நேரத்தில் அது ஓர் அகநிலை ஆன்மீக அமைதியையும் காட்சிப்படுத்துவதாக விளங்கும் சிறப்புடையது.

இந்நூலை ஆசிரியர் பத்துப் பாகங்களாக வகுத்துப் பமரமக்களும் விளங்கும் வண்ணம் மிகவும் எளிமையான மொழிநடையினை கையாண்டுள்ளமை சிறப்பான விடயமாகும். மக்கள் இந்து தத்துவங்களைப் புரிந்துகொள்ளாமையால் தான்

அவற்றை மூடக்கொள்கைகளாக நினைக்கிறார்கள் என்றும், வாழ்க்கைத் தத்துவங்களைக் கேள்விக்குரியவைகளாக நினைக்கின்றார்கள் என்றும், புரிந்து கொண்ட இந்நூல் ஆசிரியர் மனிதனுக்கு இன்பத்தை அள்ளிக் கொடுக்கின்ற இந்து தத்துவங்களைக் கதையாக கூறுவதன் மூலம் அதிகபயன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சில தத்துவங்களை இந்நூலில் கதைகளாகக் கூறியுள்ளனர்.

ஒவ்வொருவரும் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பம் அவர்களது மத நம்பிக்கையீனத்தாலேயே வந்தது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்பதனையும், தனக்கேற்பட்ட துன்பத்தைத் தானே நீக்க வேண்டும் என்று நினைப்பவன் தான் உண்மையான சமயவாழ்வு வாழ்பவன் என்றும் மிகவும் சிறப்பாக இந்நூல் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். சங்ககாலத்தில் சொல்லப்பட்டவை செய்யுள் வடிவில் காணப்பட்டமையினால் கற்றவர்களே அதை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருந்தது. அதனை உணர்ந்த நூலாசிரியர் காலத்தின் தேவையை அறிந்து அதற்கேற்பத் தக்ககருத்துக்களோடு ஆக்கியுள்ளார்.

மேலும் இந்நூலில் பகவத்கீதை, திருக்குறள், வேதங்கள், உபநிடதங்கள், திருமந்திரம், இராமாயணம், ஆத்திசூடி, திருப்புகழ் போன்ற இன்னோரன்ன நூல்களைக் கற்று இந்து மதத்தின் மகிமையினை அருமையான பாடல்களையும் பொருத்தமாக மேற்கோள் காட்டி எழுதியுள்ள தோடு ஒவ்வொரு அத்தியாயங்களிலும் நிறைவாக ஒவ்வொன்றுக்கு மேற்பட்ட உதாரணங்களை முழுமையாகத் தந்துள்ளமை அறிவுக்காக இந்நூல் படிப்பது மட்டுமன்றி இன்பத்தை அள்ளித்தருவனவாகவும் இந்நூல் அமைகின்றது

எனலாம். ஆராட்சியிலீடுபடுவோருக்கு ஓர் அறிவுப் பொக்கிச - மாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நூல்களின் தத்துவங்களை நன்கு ஆழமாகப் புரிந்து அதன் மூலம் அவர் தனது மனதில் கிளர்ந்தெழுந்த சிந்தனைகளையும், தத்துவங்களையும் இந்நூலினூடாக எடுத்துப்பேசி கற்றோர்க்கு மட்டுமன்றி கற்றுக்கொண்டிருப்பவர் களுக்கும் நன்கு பயன்படுத்தும் நூலாகவும் ஆக்கியுள்ளார்.

நான் அவரால் எழுதப்பட்டு வெளிவர இருக்கும் "இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்" என்னும் நூல்களை வாசித்துப் பார்த்தேன். அதில் இருக்கும் தத்துவ சிந்தனைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. இந்நூல் சைவமக்களுக்கு மட்டுமல்லாமல், ஏனைய மதத்தினருக்கும் பயன்பாடுள்ள நூலாக அமையும் என்பது திண்ணம். அவருக்கு இந்நூல் மூலம் பெரும் புகழ் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

இந்துமத மகத்துவத்தைச் சீரும் சிறப்பும் பொலிந்த நூல்வடிவாக அமைத்துச் சைவப் பெருமக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்தும் நோக்காக இந்நூல் வெளியிடப்படுவதனையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இவரிடம் சைவப்பண்பு, ஒழுக்கம், சைவசமய அறிவு, இறைபக்தி நிரம்பி இருப்பதை நான் கண்டுள்ளேன்.

இவர் மென்மேலும் சைவசமயத்துக்காக உழைத்துப் பல நூல்களை எழுதி மக்களுக்கு பயன்படக் கூடிய முறையில் இலகு தமிழ் எழுதி வெளியிட வேண்டும். அத்துடன் இவர் பல விருதுகளைப் பெற்று குடும்பத்தினருடன் சுகதேகியாக பல ஆண்டு காலம் வாழவேண்டுமென்று இறைவனை வேண்டி

வாழ்த்துவதோடு, இந்நூலை எழுதி எம்சமுதாயம் நல்வழிப்பட உதவிய இவருக்கு வார்த்தைகளால் நன்றி சொல்லல் போதாது. ஒவ்வொருவரும் நூலைப் பெற்றுப் படித்து அதன் பயனைப் பெறுவதே நாம் செய்யும் கைமாறு எனக்கூறி இம்முயற்சி மேன்மேலும் வளர வேண்டும் என வாழ்த்தி அமைகின்றேன்.

சுபம்.

பேராசிரியர், கலாநிதி. இரா. சாந்தன் ஶ்ரீ
கல்வித்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

# அணிந்துரை

திரு. கே.வி குணசேகரம் அவர்களின் எழுத்துக்கள் பல்வேறு பரிமாணங்களிலும் தடம் பதித்துச் செல்வதைக் காணலாம். இவரது எழுத்துக்களில் உச்சமாகக் கொள்ளக் கூடியது திருக்குறள் கதைகள் தான் என்றால் அதுமிகையல்ல. இலக்கியத்தில் முதன்முதலாகக் குறள்களைக் கதைகளாக்கி அவற்றைச் சகல தரப்பினரும் விரும்பி வாசிக்கும் படி சுவைபடத் தந்தமை செயற்கரியதொரு செயலாகும். இதோடு வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, திருமந்திரம், கந்தபுராணம், பெரியபுராணம், திருக்குறள் போன்ற நூல்களில் காணப்படும் அரிய கருத்துக்களை ஒப்பிட்டு ஒத்திசைவு கண்டு, அவற்றை வாசகர் பால் கொண்டுசென்று, அவர்களை மென்மேலும் சிந்திக்க வைக்கும் வகையில் எடுத்துக் கூறுவதைக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட நூல்கலெல்லாம் கற்றுத் தேர்ந்த அறிவியலாளர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும் என்ற மாயத்திரையை விலக்கி வாசிக்கும் எல்லோருக்கும் விளங்கவைப்பதில் வெற்றிகண்ட ஓர் எழுத்தாளர் இவர் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

இந்த வகையில் இவர் ஆக்கித்தந்துள்ள ‘‘இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்’’ என்ற பத்துப் பாகங்கள் என்னும் நூற்தொகுதி மிகுந்த பயனுடைய பொக்கிசமாகும். சிறுவர், பெரியோர், கற்றோர், கல்வியலாளர், மற்றும் தேடல் ஆர்வம் நிறைந்த எல்லாத் தரப்பினர்களையும் தன்பால் இழுக்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறப்பாக வித்துவத் தன்மை மிக்க கடுமையான மொழிநடையில் அல்லாமல் எல்லோரையும் சென்றடையும் நோக்கில் இலகு

தமிழில் எளிய உதாரணங்களுடன் தன் உண்மை அனுபவங்களையும் ஒன்று சேர்த்து மிக அழகாக அமைந்துள்ளமையே இவரது வெற்றியாகும். ஒரு நூலின் வெற்றி என்பது எவ்வளவு தூரம் பரந்து விரிந்து வாசகர்களிடம் அந்நூலின் கருத்துக்கள் சென்றடைகிறது என்பது தான். அதனை இயல்பாகவே எழுத்தாளரின் திறமை வெளிப்படுத்தி நிற்கிறது.

அந்நூல்கள் மட்டுமன்றி புனைகதைத்துறையிலும் முத்திரை பதித்தவர் கே.வி குணசேகரம் அவர்கள். கையில் எடுத்தால் மீண்டும் வைக்கமுடியாத அளவுக்குத் துடிப்பாகவும் வேகமாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதை சொல்லும் பாங்கு வியக்கத்தக்கது. பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்த மனதில், உலவும் நிலவு, அவிழாத முடிச்சுக்கள், கண்களுக்குச் சொந்தமில்லை, போர்க்களம் முதலான நாவல்கள் இவற்றுள் சில உதாரணங்கள்.

பல்துறை விற்பனராக விளங்கும் எழுத்தாளர் நுனிப்புல் மேயும் பலர் மத்தியில் தான் தொடும் விடயங்களில் ஆழமான புலமையைப் பெற்று, அதன் பின்னர் அவற்றை எழுத்துருவாக்கம் செய்வது அவரது நூல்களைப் படிக்கும் போது தெளிவாகத் தெரிகின்றது. இவரது பேனாவின் நுகம் என்றும் ஓயாது என்று மட்டும் உறுதியாகக் கூறும் அதேவேளை இன்னும் இன்னும் பல்துறைகளில் எழுத வேண்டும் என்பது பல்லாயிரம் வாசகர்களின் விருப்பமாகும். அதனை அவர் நிறைவேற்றுவார் என்று நிட்சயம் நம்பலாம்.

நன்றி.

91, மானிப்பாய் வீதி, வா. ஜெயரட்ணம்
ஆணைக்கோட்டை. (ஓய்வு பெற்ற அதிபர்)

# விமர்சன உரை

ஒருவர் தனது வாழ்க்கையில் பல்லாயிரக்கணக்கான மனிதர்களைச் சந்திப்பதுண்டு. இவர்களுள் மிகவும் அபூர்வமானவர்களை விதி வசத்தாலோ அன்றி அதிஷ்டம் காரணமாகவோ சந்திப்பதுண்டு. இவ்வகையில் நான் சந்தித்த மிகவும் அபூர்வமான ஓர் அறிஞர் தான் திரு. கே.வி. குணசேகரம்.

அவர் எழுதிய நாவல்கள் சிறுகதைகள், நாடகங்கள், திருக்குறள் கதைகள், பகவத்கீதைக்கதைகள், சிறுவர் கதைகள், கவிதைகள், இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம் என்ற கட்டுரை நூல்கள் பத்து ஆகியவற்றை எழுத்துப் பிழைகளை நீக்குவதற்காகப் படித்தேன்.

காதல், ஒழுக்கம், பண்பு, எல்லோரையும் சமமாக மதிக்கும் தன்மை, தவறு செய்தவர்களையும் மன்னிக்கும் பக்குவம், கருணை, இரக்கம் போன்ற பல நற்பண்புகளை உருவாக்கும் தன்மை இவரது படைப்புகளில் உண்டு. இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம், திருக்குறள் கதைகள், பகவத்கீதைக்கதைகள் என்பன இந்து தத்துவங்களுக்கு எளிமையான விளக்கங்களையும், சுவையான கதைகளையும் எமக்குத் தருகின்றன. வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள சகல நிகழ்ச்சிகளுக்கும் அருமையான தமிழில் விளக்கம் தந்துள்ளார். இப்படியான விளக்கங்களை இதுவரை யாரும் தந்ததில்லை. காலத்திற்குக் காலம் பெரும் பெரும் ஞானிகள் தோன்றி இந்து சமயங்களை வளப்படுத்தினர். தற்போது கே.வி.குணசேகரம் அவர்கள் தற்போதுள்ளவர்களுக்கு விளங்கும் வகையில் இந்து தத்துவங்களைக் கதைகளாகவும், கட்டுரைக

ளாகவும் எழுதி வருகிறார். இந்த வகையில் மூவாயிரத்திற்கும் அதிகமான கதைகளையும், ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரை களையும் எழுதி இந்து தத்துவத்தை வளம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்துக்கள் அனைவரும் இதைக் கற்றுப் பயன் பெறல் வேண்டும். மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் இந்து தத்துவங்களின் பிழிசாறாக வெளி வந்துள்ள இவரது நூல்களைக் கற்றுப் பயன்பெறவேண்டும்.

தமிழ் மக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடுகள் யாவும் மிகச் சிறப்பாகவும், அர்த்தம் பொதிந்தவையாகவும் இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதத்தில் உள்ளன. இந்துமதத் தத்துவங்களுக்குரிய அர்த்தங்களை இந்து தத்துவ நூல்களாகிய வேதம், உபநிடதம், திருமந்திரம், பகவத்கீதை, திருக்குறள், கந்தபுராணம், பெரியபுராணம், பதிணெண் புராணங்கள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற பல நூறு நூல்களில் இருந்து அவர் பெற்றுள்ளார். இவற்றைப் படிப்பதன் மூலம் இந்து தத்துவங்கள் முழுவதையும் கற்ற உணர்வு உண்டாகிறது. பொதுவாக இந்து தத்துவ நூல்களைக் கற்றாலும் விளங்குவதில்லை. ஆனால் கே.வி. குணசேகரத்தின் நூல்களைப் படித்த பின் இந்து தத்துவங்கள் யாவும் மிகவும் இலகுவாக விளங்குகின்றன. பகவத்கீதையின் உரை, விளக்கம், கதை என்பன அதை வாசிக்கும் அனைவருக்கும் புரியும். இந்துதத்துவத்தை இந்துக்கள் சரியாகப் புரிந்து கொள்ள உதவும் இவரது பணிதொடர அவரது குல தெய்வமான நாவலர் ஸ்ரீவித்தியா மஹா கணபதி தொடர்ந்தும் தனது அங்குஷத்தால் எழுத வேண்டும் என்று அவரை நான் பிரார்த்திக்கின்றேன்.

செல்வி. ப. இறைமகள்.
ஆசிரியை,
யா.். அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

# கீதையும் வாழ்வும்

பகவத்கீதை என்றதும் மனதுள் ஓர் இனம்புரியாத பயம் உண்டாகிறது. அது தெய்வீகநூல். அதைத் தொடுவதானால் கூட ஆசாரத்துடன் தான் தொடல் வேண்டும்.

திருப்பித் திருப்பிப் படித்தாலும் விளங்காது

அது வாழ்வியல் நூல் அல்ல போர் நூல். ‘‘கடவுளே தனது பக்தனுக்கு எதிரிகளை மன்னித்துவிடாது அவர்களைக் கொல்’’ என்று திரும்பத் திரும்பக் கூறும் நூல்.

‘‘இந்து சமயத்தத்துவங்கள் யாவும் நிறைந்த புனித நூலான பகவத்கீதையைப்படித்தால் பிறவிக்கடலைத்தாண்ட முடியும்’’

பகவத்கீதையைப்பற்றி இவ்வாறு பலரும் கூறியுள்ளனர்.

பகவத்கீதை வாழ்வியல் நூல். அதை மனிதர்கள் எல்லோரும் படிக்கவேண்டும் என்று தான் நான் சொல்வேன்.

இந்துசமயத்தத்துவங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் வேதங்களைப் படித்தல் வேண்டும். வேதப் பாடல்களை நான்காக வகுத்தவர் வேதவியாசர். இவர்தான் இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரத்தை எழுதியவர் . பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே பீஷ்மபர்வத்தில் 18 நாட்கள் போர் நடைபெற்றது. பகவத்கீதை மகாபாரதத்தில் நடைபெற்ற போரின் போது அறக்கடவுளான மஹாவிஷ்ணுவால் அருச்சுனனுக்குப் போதிக்கபட்டது.

மகாபாரத்தின் 25 ஆவது அத்தியாயத்திலிருந்து 42 ஆவது அத்தியாயம் வரை இந்த அரிய நூல் காணப்படுகிறது. இதில் 18 அத்தியாயங்கள் உள்ளன. இவைகளில்

அமைந்துள்ள சுலோகங்கள் 700 ஆகும். மகாபாரதம் என்னும் உடலுக்கு கீதையின் சுலோகங்கள் இருதயமாக அமைந்துள்ளது என்று அறிஞர் கூறுவார்.

வேதத்தின் இறுதிப் பகுதி உபநிடதம். இது வேதத்தின் இறுதிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ள தனியான பகுதி.

மெய்ப்பொருளின் ஆராய்ச்சியில் உபநிடதங்களின் பங்கு எத்தகையது என்று விளக்குவது பிரம்ம சூத்திரம். இதற்கு வேதாந்த சூத்திரம் என்று இன்னொரு பெயர் உண்டு. உபநிடதங்கள் கூறும் கருத்தைத் தெளிவாக விளக்குவது பகவத்கீதை. உபநிடதங்களைப் பசுக்கள் என்றும் பகவத்கீதை பால் என்றும் கூறப்படுகிறது.

உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்று நூல்களும். பிரஸ்தானத்திரயம் என்னும் பெயர் பெறுகின்றன. முடிவான பிரமாணமாக அமைந்த மூன்று நூல்கள் என்பது இதன் பொருளாகும். இம்மூன்று நூல்களுள் கருத்து வேற்றுமை கிடையாது. தத்துவ விளக்கம் அல்லது மெய்ப்பொருள் விளக்கம் இம்மூன்று நூல்களுள்ளும் முழுமையாக நிறைந்துள்ளது.

பாரதக்கதையை அறியாத இந்துக்கள் எவரும் இல்லை கௌரவர்கள் பாண்டவர்களுக்குத் தினமும் கொடுமைகள் பலவற்றைச் செய்து வந்தனர். அவர்கள் நிம்மதியாக வாழ ஐந்து வீடுகளைக்கூடக் கொடுக்கக் கௌரவர்கள் விரும்ப வில்லை.

அடிப்படை உரிமைகள் எவையும் இன்றி மிகுந்த துன்பத்துடன் வாழ்ந்த பாண்டவர்களின் துன்பத்தைப் போக்குவதற்காகக் கிருஷ்னர் கௌரவர்களின் தலைவனான துரியோதனனிடம் தூது சென்றார். அவர் நீதி நியாயங்கள்

பலவற்றை எடுத்துக்கூறிய போதும் ஒரு சிறு சலுகையைக்கூடக் கொடுக்கத் துரியோதனன் விரும்பவில்லை. அதனால் போர் மூண்டது.

பாரததேசமே கௌரவர்களுக்காகப் போர் செய்யத்திரண்டு நின்றது.

ஸ்ரீகிஷ்னரின் துணை மட்டும் இருந்ததால் தாம் வெற்றி பெற்று விடுவோம் என்று அரிச்சுனன் நம்பினான்.

ஸ்ரீ கிருஷ்னர் தேவையில்லை. அவரது படை வீரர்களைத் தந்தால் போதும் என்றான் துரியோதனன்.

அத்துடன் தான் போர்புரியவில்லை என்றும் அர்ச்சுனனது தேர்ச்சாரதியாகக் கடமையாற்றப் போகிறேன் என்றும் ஸ்ரீகிருஷ்னர் அறிவித்தார்.

போர் ஆரம்பமான அன்று ஸ்ரீகிருஷ்னர், பீஷ்மர், துரோணர், கர்னன் ஆகியோரின் முன்னிலையில் தேரைக் கொண்டு சென்று நிறுத்தினார்.

தன்முன்னால் தன்னுடன் போர் செய்யத் திரண்டு நிற்கும் தந்தைமாரையும், பாட்டன்மாரையும், ஆசாரியர்களையும், மைத்துனர்களையும், அண்ணன் தம்பிகளையும், மாமன்மாரையும், அன்பர்களையும் அர்ச்சுனன் பார்க்கின்றான். அவனது மனம் போரிரக்கம் கொள்கிறது. அதனால் மிகுந்த சோகத்துடன் கிருஷ்னனுக்குச் சொல்கிறான்.

‘‘கிருஷ்னா, போர் புரிவதற்காகக் கூடியுள்ள உற்றார், உறவினர்களைப் பார்த்ததும் என் உறுப்புக்கள் சோர்வடை கின்றன. தொண்டை வரண்டு விட்டது. என் உடல் நடுங்குகிறது, மயிர்கள் கூச்செறிகின்றன. கையிலிருந்து காண்டீபம் நழுவுகிறது. மேலெல்லாம் எரிகிறது. கேசவா,

என்னால் நிற்கக்கூட இயலவில்லை. மனம் சோர்வடைகிறது. கேடுடைய சகுனங்களையும் காண்கிறேன். கோவிந்தா, யாரின் நன்மைக்காக இந்த ராஜ்யத்தையும், போகங்களையும், இன்பங்களையும் விரும்புகின்றோமோ அவர்களாகிய ஆசாரியர்கள், தந்தையர், மக்கள், பாட்டன்மார், மாதுவர், மாமனார், பேரர், மைத்துனர், சம்பந்திகள் முதலியோர் தம் உயிர்களையும் செல்வங்களையும் துறந்தவர்களாய் இங்கு வந்து போராடுவதற்கு நிற்கின்றனர். இந்நிலையில் எமக்கு இந்த ராஜ்ஜியபோகத்தால் ஆவது என்ன?''

மிகுந்த சோர்வுடன் பேசிய அர்ச்சுனன் மீண்டும் சொல்கிறான். ''மதுசூதனா, மூவுலகை ஆளும்பேறு எனக்குக் கிடைப்பதாக இருந்தாலும் கூட நான் இப் போரைச் செய்ய மாட்டேன். அத்துடன் திருதராட்டினனது புதல்வர்களுக்காகப் போராட வந்திருக்கும் இவ் அப்பாவிகளைக் கொல்வதால் எனக்குப் பாவமே வரும். ஆசை மிகுதியால் அறிவிழந்த இவர்கள் தர்மத்தையும் நீதியையும் உணர்ந்து கொள்ளாமையினாலேயே இங்கு வந்தனர். தர்மத்தையும் நீதியையும் உணர்ந்த நாம் அவர்களுடன் போராடுவதை விடுத்தால் என்ன? அரச சுகபோக ஆசையினால் சுற்றத்தாரைக் கொல்லத்துணிந்து விட்டோம். காண்டீபத்தை எறிந்து விட்டேன். இப்பொழுது என்னைப் கொன்றால் எனக்குப் பெரும் புண்ணியம் உண்டாகும்'' என்றுகூறித் தேர்த்தட்டில் அமர்கிறான் அரிச்சுனன்.

துரியோதனனும் அவனது சகாக்களும் கொடுமைகள் செய்யும் போது வெகுண்டெழுந்த அர்ச்சுனனைத் தருமன் பலமுறை சமாதானம் சொல்லித்தடுத்திருக்கிறான். அதைவிடத் திரௌபதையைச் சபையின் நடுவே துயிலுரிந்தபோது

துரியோதனனையும், துச்சாதனனையும் கொலை செய்ய முயன்றான் அர்ச்சுனன். இப்படி ஆத்திரம் வரும் போது பல முறை கொலை செய்ய முயன்றவன் அர்ச்சுனன். ஒவ்வொரு முறையும் கௌரவர் கூட்டம் பாண்டவர்களுக்குக் கொடுமைகள் செய்தபோது எழுந்த ஆத்திரத்தைத் தருமனுக்காக அடக்கியவன். இப்பொழுது அவர்களைத் தண்டிக்கச் சந்தர்ப்பம் உண்டானபோது அதைத் தகுந்த முறையில் நிறைவேற்ற முடியாது துன்பப்பட்டான் அர்ச்சுனன்.

நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் கௌரவர்களுக்காதரவாகத் தம்மை எதிர்க்க வந்து நிற்பதை அர்ச்சுனனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

யாரோ ஒருவன் செய்த தீமைகளுக்காக, தீமை செய்தவனுடன் சேர்ந்து வந்திருக்கும் நல்லவர்களைத் தண்டிப்பது நியாயமாகுமா என்ற எண்ணம் அர்ச்சுனனின் மனதில் எழுந்து. அதனால் அர்ச்சுனனின் மனம் சங்கடப்பட்டது.

தமக்குப் பிரம்மச்சாரியப் பருவத்தில் கல்வியையும் வித்தைகளையும் கற்பித்த துரோணாச்சாரியாரை எப்படிக் கொல்வது என்று சிந்தித்தான்.

பெரியவர்களின் மனத்தைத் துக்கப்படுத்துவதே பாவம்.

குருவை நிந்தனை செய்வது பாவம்.

போகங்களுக்காக எண்ணிறைந்த மக்களைக் கொல்வது பாவம்.

இப்படிக் கற்றுவிட்டு அதை எப்படிச் செய்வது என்று அர்ச்சுனன் தடுமாறினான்.

இது சாதாரணமாக ஒரு குடும்பத்தில் நடைபெறும் சாதாரணமான நிகழ்வு.

நீதியுள்ள ஒருவன் தனது பெற்றாராக இருந்தாலென்ன, கடவுளாக இருந்தாலென்ன நீதியின்படிதான் நடந்து கொள்ள வேண்டும் என்றும், குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூறுவது தான் பகவத்கீதையின் அடிப்படை இலட்சியம்.

இறைமாட்சி என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் அரசனைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்.

வீரமான படை, நன்மக்கள், நிறைத்த உணவு,சிறந்த அமைச்சர்கள், நல்ல நண்பர்கள், பாதுகாப்பு மிக்க அரன் ஆகிய ஆறு அங்கங்களையும் உடையவனே ஆண் சிங்கம் போன்ற அரசனாவான்

அஞ்சாமை,ஈகை, மிகுந்த அறிவு, ஊக்கமுடைமை என்ற நான்கும் குறைவுபடாதிருத்தலே சிறந்த அரசனின் பண்பாகும்.

காலம் தாழ்த்தாமை, கல்வியறிவுடைமை, துணிவு ஆகிய மூன்றும் அரசனிடம் நீங்காது இருத்தல் வேண்டும்.

அறம் தவறாமல், நீதியில்லாதவர்களை நீக்கி, வீரம் குறையாது,மானத்தைப் போற்றுபவனே சிறந்த அரசனாவான்.

பொருள் சேர்க்கும் வழி வகைகளைப் பெருக்குதல், சேர்த்த பொருட்களைப் பாதுகாத்தல், பாதுகாத்த பொருட்களைப் பாகுபாடின்றிப் பகிர்ந்தளித்தல், ஆகிய பண்புகளை உடையவனே சிறந்த அரசனாவான்.

பழகுவதற்கு எளியவனாகவும், கடுஞ் சொற்களைப் பேசாதவனாகவும் இருந்து ஆளும் அரசனின் நாட்டை உலகம் புகழும்.

மக்களோடு இன் சொல்பேசி, வேண்டிய உதவிகள் செய்யும் அரசனுக்குப் புகழ் சேர்வதோடு அவனது விருப்பப் படி ஆட்சியும் அமையும்.

நீதி நெறி முறைகள் தவறாமல் ஆட்சி செய்யும் அரசனை, மக்கள் இறைவனின் இடத்தில் வைத்துப் போற்றுவார்கள்.

குறை கூறுபவர்களின் சொற்களைக் கேட்டுப் பொறுத்துக் கொள்ளும் அரசனின் பண்பில் உலகம் தங்கியுள்ளது.

கொடை, கருணை, நீதி தவறாமை, குடிகளைக் காத்தல் ஆகிய நான்கு தன்மைகளையும் உடைய அரசன், அரசர்க் கெல்லாம் விளக்குப் போன்றவன்.

பகவத்கீதை திருக்குறளுக்கு முந்தியது. வள்ளுவர் வடமொழியில் இருந்த பகவத்கீதைச் சூத்திரங்கள் அனைத்தையும் நன்கு கற்று, அதனைத் தமிழில் கூறியுள்ளார். பெரும்பாலான குறள்களில் பகவத்கீதையின் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

இது தவிரச் செங்கோன்மை என்ற அதிகாரத்திலும் வள்ளுவர் அரசனின் நீதி நெறிகளைப்பற்றிக் கூறியுள்ளார்.

யாராக இருந்தாலும் அவர்கள் செய்த குற்றத்தை ஆராய்ந்து இரக்கம் காட்டாமல், நடுவுநிலைமை தவறாமல் தக்க தண்டனை அளிப்பதே சிறந்த நீதி நெறியாகும்.

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. அதே போல குடிமக்கள் எல்லோரும் அரசனது செங்கோலை நம்பி வாழ்கின்றனர்.

அந்தணர் ஓதும் வேதத்திற்கும், அறத்திற்கும் மூலமாக நின்று உலகத்தைக் காப்பது மன்னனுடைய செங்கோலாகும்.

குடிகளை அன்போடு அணைத்து அவர்களின் குறைகள் யாவற்றையும் தீர்த்து அரசாளுகின்ற அரசனின் பாதங்களைப் போற்றி பின் பற்றி நிற்கும் உலகு.

நீதி வழுவாது, அரசாளும் அரசனது நாட்டில் பருவ மழையால் நிறைந்த விளைவு ஏற்படும்.

ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அல்ல, மன்னனது நீதி தவறாத ஆட்சி முறையே ஆகும்.

உலகத்தை அரசன் காப்பாற்றுவான்.; அரசனை நீதி நெறி முறை தவறாத ஆட்சி காப்பாற்றும்.

மக்களின் குறைகளை நேரில் கேட்டறியாத வனாகவும், ஆராய்ந்து பாராமல் நீதி வழங்குபவனாகவும் உள்ள அரசன், பகைவர்கள் யாருமில்லாமலே கெடுவான்.

குடிகளுக்குப் பிறராலும், தன்னாலும் துன்பம் வராமல் காத்து அவர்கள் செய்யும் குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை கொடுத்தல் ஆள்பவனுக்குப் பழியாகாது; அது அவனது கடமையாகும்.

அரசன், கொடிய செயல்களைச் செய்தவர்களுக்கு மரணதண்டனை வழங்குவது, பயிரைக் காப்பாற்ற உழவர்கள் களைகளைக் களைவதற்கு ஒப்பான செயலாகும்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை மகாவிஷ்ணு அரிச்சுனனுக்குக் கூறுகிறார்.

தீமை செய்தவர்களுக்கும் அவர்கள் வெட்கப்படும் படியாக நன்மை செய்ய வேண்டும் என்று கூறும் வள்ளுவர், கொடிய குற்றங்கள் செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது அரசனது கடமை என்கிறார்.

வள்ளுவரைப் போல அறக்கருத்துக்களை யாரும் சொன்னதில்லை. அது போல நீதிக்கருத்துக்களையும் யாரும் சொன்னதில்லை. பகவத்கீதையில் பகவான் மஹாவிஷ்ணு நூற்றுக்கணக்கான சுலோகங்களில் கூறியதை வள்ளுவர் இரண்டு அடிகளில் கூறியுள்ளார்.

பகவத்கீதையில் மகாவிஷ்ணு கூறுவது கொடுமையானது என்று கூறுவோர் பலர் இருக்கின்றனர். ஆனால் வள்ளுவர் கூறியதைக் கொடுமையானது என்று யாரும் கூறவில்லை.

பகவத்கீதை அரசனுக்குத்தான் நீதியை எடுத்துக் கூறுகிறது. அரசர்கள் சகல வல்லமையும் உள்ளவர்கள். அவர்களது ஆட்சிக்குட்பட்ட நாட்டின் சகல வளங்களும் அரசர்களுக்கே உரியது. அதுபோல மக்களைக் காப்பதும் அரசரது கடமை. அரசன் நீதிவானாக இருந்தால் தான் நல்ல ஆட்சி நடைபெறும்.

நல்ல அரசன் இல்லாத நாடு எப்படிப்பட்டதென்று வள்ளுவர் கூறுகிறார்.

மழைத்துளி இல்லா விட்டால் உலகம் எத்தன்மை யாகுமோ, அத்தன்மையானதே நாட்டில் வாழும் குடி மக்களுக்கு அருளில்லாத அரசனின் ஆட்சி.

நீதியில்லாத முறையில் ஆட்சி செய்யும் அரசனின் ஆட்சியின் கீழ் வாழும் மக்களுக்குப் பொருளில்லாத வறுமை நிலையை விடச் செல்வ நிலை துன்பமானதாகும்.

அரசன் நீதி நெறி தவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவ மழை தவறி மேகம் மழை பெய்யாமல் போகும்.

நாட்டைக் காக்கும் காவலனான அரசன் முறைப்படி நாட்டைக் காக்கா விட்டால், பசுக்கள் பால் தருவதைக் குறைக்கும். அந்தணர்கள் அறநூல்களை மறந்து போவர்.

இதைவிட அரசனின் கடமைகள் என்னென்னவென்றும் வள்ளுளவர் கூறுகிறார்.

ஒருவன் குற்றம் செய்தால் அதைத் தக்கவாறு ஆராய்ந்து மீண்டும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதபடி பொருத்தமான தண்டனையை வழங்குபவனே அரசன் ஆவான்.

அமைச்சர் முதலான தனது இனத்தாருடன் கலந்து எண்ணாத அரசன், அர்த்தமின்றி கோபம் கொள்வானானால், அவனுடைய செல்வம் சுருங்கிப் போகும்.

இவற்றையே பகவத்கீதையும் கூறுகிறது.

அர்ச்சுனன் துயரத்தால் துன்பப்படும் போது விஷ்ணு அத்துன்பம் நியாயமானது அல்ல என்று விளக்கமாக எடுத்துக்கூறுகிறார். அவரது உபதேசங்கள் ஆத்மாவைப் பற்றியது

"அர்ச்சுனா, துயரத்திற்குரியவர் அல்லார் பொருட்டு நீ துயரப்படுகிறாய். முன்பு எப்பொழுதாவது நான், நீ, இவ்வரசர்கள், ஆசிரியர்களில் யாராவது இல்லாதிருந்ததில்லை. இவ்வுடல்கள் அழிந்தாலும் நாம் இல்லாமற்போக மாட்டோம். ஆத்மாவிற்கு இவ்வுடலில் இளமையும், யௌவனமும், மூப்பும் உண்டாவது போல வேறு உடல் எடுப்பதும் அமைகிறது. அதை உணர்ந்தவன் அதன் பொருட்டுத் துயரமடைய மாட்டான்"

"நித்தியமாய், நாசமற்றதாய், அளப்பரியதாய் உள்ள ஆத்மாவின் இவ்வுடலங்கள் யாவும் அழியும் தன்மை வாய்ந்தன"

"ஆத்மாவைக் கொலையாளி என்றும், கொலையுண்பா னென்றும் எண்ணாதே. ஆத்மா கொல்வதும் இல்லை, கொலையுண்பதும் இல்லை. அத்துடன் ஆத்மா பிறப்பதில்லை. இறப்பதும் இல்லை. இல்லாதிருந்து பிறகு பிறந்ததுமல்ல.

ஆத்மா பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது. உடல் கொல்லப்படுமிடத்தும் ஆத்மா கொல்லப்படுவதில்லை''.

''பழுதடைந்த துணிகளைக் களைந்து விட்டுமனிதன் புதிய உடைகளை அணிவது போல, ஆத்மா பழைய உடலை விட்டுப்பிரிந்து புதிய உடலைப் பெறுகிறது. ஆத்மாவை ஆயுதங்கள் வெட்ட மாட்டாது. தீ அதை எரிக்காது, காற்றும் அதைத் தீண்டாது''

இவ்வாறு மஹாவிஷ்ணு ஆத்மாவைப் பற்றி அரிச்சுனனுக்குக் கூறுகிறார். அதன்பின் அரச தா்மத்தை எடுத்துரைக்கிறார்.

''அருச்சுனா, அறப்போரைக் காட்டிலும் வேறு சிறப்பு அரசா்க்கில்லை. தற்செயலாக நோ்ந்தாலும் திறந்த சுவா்க்கவாயில் போன்றதுமான இந்த யுத்தத்தை பாக்கிய வான்களாகிய அரசா்கள் மட்டுமே அடைகிறார்கள்''.

''தா்மயுத்தத்தை நடத்தாத அரசன் ஸ்வதா்மத்தையும் கீா்த்தியையும் இழந்து பாபத்தை அடைவான். மானிடா்கள் உன்னை இகழ்வார்கள்; போரில் மடிந்தால் சுவா்க்கத்தை அடைவாய்; வென்றால் மண்ணுலகை ஆண்டு அனுபவிப்பாய். வினையாற்ற மட்டுமே அரசா்கள் கடமைப்பட்டவா்கள் அதனால் வினைப் பயனில் பற்றுக் கொள்ளாது வினையை ஆற்று''

மனச் சஞ்சலத்துடன் இருந்த அரிச்சுனனது மனத்தைத் தெளிவுபடுத்தி அரசா்களது கடமைகளைக் கூறுவதே மஹாவிஸ்ணுவின் போதனையின் நோக்கமாகும்.

துரியோதனனது ஆட்சியில் மக்கள் பெருந்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனா்.

கொடுங்கோல் மன்னனின் ஆட்சியில் மக்கள் படும் வேதனைகளைப் பற்றி இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

முறையில்லாத செயல்களைச் செய்து குடிகளை வருத்துவதைத் தொழிலாகச் செய்யும் அரசன், கொலைத் தொழிலைச் செய்பவர்களை விடக் கொடியவன்.

ஆட்சிக்குரிய செங்கோலை ஏந்தி அரசாளும் அரசன், குடிகளை வருத்திப் பொருள் கேட்பது, கையில் வேல் ஏந்தி நிற்கும் வழிப்பறிக் கள்வன் பயணிகளிடம் ‘‘பொருள் கொடு’’ என்று பயமுறுத்துவதைப் போன்றது.

ஆராயாமல் எதையும் செய்யும் கொடுங்கோலனான அரசன், பொருளையும் குடிகளையும் ஒன்றாக இழப்பான்.

அரசனது கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாது மக்கள் வேதனைப் பட்டு அழுத கண்ணீர், அக் கொடுங்கோலனது ஆட்சியை அடியோடு அழிக்கும் படையாகும்.

அரசனது புகழை நிறுத்துவது அவனது நீதி தவறாத ஆட்சி முறையே ஆகும். அதிலிருந்து அவன் தவறினால் புகழ் இல்லாமல் போய் விடும்.

தீமைகளைச் செய்பவர்களைக் கடவுள் தண்டிப்பார்.

தீமைகள் செய்வோர் அழிப்பாரின்றி அழிவர். என்று இந்து தர்மம் கூறுகிறது. அதனால் தான் மஹாவிஷ்ணு ‘‘நீ அழிப்பவன் அல்ல’’ என்று கூறுகிறார். துரியோதனனை, அவன் செய்த தீமைகள் தான் அழித்தது. வாழ்க்கையின் தத்துவமும் அதுதான். ஒவ்வொருவரினதும் வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மை உடையதாகவும் இருந்தால் தான் உலகம் சிறப்பும் தூய்மையும் பெறும். தூய்மையில்லாதவர்களால் தூய்மையான செயல்களைச் செய்ய முடியாது. கௌரவர்கள் ஒரு போதும்

தூய்மையானவர்களாக இருந்ததில்லை. அதனால் மக்கள் அனைவரும் துன்பப்பட்டனர். அதை நீக்க வேண்டும் என்பதே மஹாவிஷ்ணுவின் நோக்காகும்.

இன்று வாழ்க்கையை எடுத்துப் பார்த்தால் பற்றும் பாசமும் தான் அனைவரையும் கெடுக்கிறது.

பணம் பொருளில் உள்ள பற்று நியாயத்தை மறைக்கிறது.

மண்ணில் உள்ள பற்று தீவினைகளுக்குக் காலாகிறது.

கடமை செய்வோர் கடமையின் பயனை எதிர்பார்க்கக்கூடாது.

தன்னால் தான் செயல்கள் நடைபெறுகின்றன என்று எண்ணல் ஆகாது.

ஆத்மா வேறு, உடல் வேறு, ஆத்மா அழிவதில்லை. உடல் அழிந்த பின் கர்மவினைக்கேற்ப ஆத்மா உடலைப் பெறும்.

ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்படட்ட கடமைகள் உண்டு. அவற்றைச் செய்து முடிப்பது அவரவர் கடன். கர்ம பலனைச் சாராது செய்ய வேண்டிய கர்மத்தைச் செய்பவன்தான் யோகி.

ஆத்மாவைப் பற்றியும் உடலைப்பற்றியும் கூறிய மஹாவிஷ்ணு மனித மனங்களைப் பற்றியும் அர்சுனனுக்குக் கூறுகிறார்.

‘‘ஒருவன் தன்னைத் தான் உயர்த்திக் கொள்ளல் வேண்டும். தன்னைத் தான் இழிவுபடுத்தலாகாது. ஒருவனுக்கு அவன் தான் நண்பன்; அது போல அவன் தான் பகைவன்.

இக்கூற்று மிகவும் உயர்ந்தது. துன்பங்கள் யாவும் அவரவரது மனத்தால் தான் உண்டாகின்றன. நல்லவற்றை

நினைப்பவர்களுக்குத் துன்பங்கள் வராது. அவருக்குத் தெரியாமல் பலர் சேர்ந்து உதவுவார்கள். தன்னைத்தான் வெல்லாத ஆத்மாவுக்கு ஒரு போதும் நிம்மதி உண்டாகாது

ஆசைகளை அகற்றிய மனமானது ஆத்மாவில் நிலை பெறுகிறது. அதனால் அது யோகத்தில் உறுதி பெறும்.

மனம் அலையும் தன்மையை உடையது. மனத்தின் தன்மையை அறிந்து அதனிடத்திலிருந்து அதை மீட்டு ஆத்மாவின் வசத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

மனம் கட்டுப்படாதது, அலையும் தன்மையானது, திகைக்கச் செய்வது, வலிமை உடையது. அதை அடக்கினால் தான் மனிதன் மகிழ்ச்சி, நிம்மதி, இன்பம் ஆகியவற்றைப் பெறுவான்.

மனதை அடக்கியவனுக்கு இம்மையிலோ, மறுமையிலோ அழிவு என்பது இல்லை. நலஞ்செய்யும் எவனும் நலிவுற மாட்டான். இப்படியானவன் புண்ணியம் செய்தவர்களின் உலகை அடைந்து அங்கே இன்பமாக வாழ்ந்திருந்து செல்வம் நிறைந்த புனிதவானின் இல்லத்தில் பிறப்பான்.

மனம் தான் மனிதனின் நல்வாழ்விற்கும், அழிவிற்கும் காரணியாவது என்ற உண்மையை நாம் பகவத்கீதையின் தியான யோகச் சுலோகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். மனம் தான் உடலை வழிநடத்துகிறது.

அன்பு, பண்பு, இரக்கம், தயவு, தாட்சண்யம், முதலியவற்றை உண்டாக்குவது மனம்.

கொடுமைகள் செய்வது, மற்ற உயிர்களுக்குத் துன்பங்கள் விளைவிப்பது, அடுத்தவனின் உயர்வைக் கண்டு பொறாமைப்படுவது, அடுத்தவனின் மனைவி மீது மோகம் கொள்வது, கொலை செய்வது யாவும் மனம் தான்.

மனதின் எண்ணங்கள் தான் செயல்களாகின்றன. எண்ணியதை முடிக்கும்படி மனம் ஐம்பொறி களையும் ஏவும், ஏவிக்கொண்டே இருக்கும். மனதின் போக்கிற்கேற்பப் பொறிகள் செயற்படும். மனம் ஒரு பெண்ணைக் கண்டு மோகித்தால் காம உணர்வு உடலெங்கும் பெருகும். அதைப்பகுத்தறிவு தடை செய்தல் வேண்டும். தீய மனம் பகுத்தறிவுக்குக் கட்டுப்படாது. அதனால் அது தனது எண்ணத்தை நிறைவேற்றத் தீயவழிகளையும், குறுக்கு வழிகளையும் நாடும். அதை நிறைவேற்றத் திட்டமிடும். தேவையேற்பட்டால் பிற மனங்களின் உதவியையும் நாடும்.

நல்ல மனது தீய செயல்களில் ஈடுபடாது. அதைப் பகுத்தறிவு கட்டுப்படுத்தி வைத்திருக்கும். இப்படிக் கட்டுப்படுத்துவதற்கு உரிய செயல்வகைகளைப் பற்றியும் கீதை கூறுகிறது.

“மனம் ஒரு நிலைப்படாதது. அதனால் ஒரு நாளைக்குப் பல்லாயிரம் முறை அது மாற்றமடையும். அது ஒரு கணத்தில் விண்ணுக்கும் சென்றுவரும், பாதாளத்திற்கும் சென்று வரும். பெரும்பாலான மனங்கள் நல்லவற்றை சிந்தித்துப் பார்ப்பதில்லை. கற்றகல்வியால் நீதி நியாயங்களைப் பகுத்தறிந்த போதும் மனத்தின் உணர்வுகள் அவற்றைச் சிந்திக்கவிடா. மனதை அடக்கித் தியானம் செய்து யோகியாக வாழ்பவனின் மனமும் சில சமயம் அலையத்தான் செய்யும். இதனால் தான் பிறப்பேற்படுகிறது என்கிறார் மஹா விஷ்ணு.

“அடக்க முடியாத மனத்தை அடக்குபவன் ஞானி” என்கிறது கீதை.

“மனதை அடக்கப் பயிற்சி தேவை. பயிற்சியின் மூலம் நினைத்ததை நினைத்த வாறு அடையலாம்” என்றும் கீதை கூறுகிறது. இதையே வள்ளுவரும் கூறுகிறார்.

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை.

இறைவனின் மகிமையை அறிந்து, அன்பு செலுத்துபவர்களைப் பிறவித்துயருக்குக் காரணமான நல்வினையும் தீவினையும் சேர்வதில்லை.

ஐம்பொறிகளால் உண்டாகும் ஆசைத் தீயினை அவித்த இறைவனின் பொய்யற்ற ஒழுக்கநெறியில் நிற்போர் என்றும் இன்பமாக வாழ்வர்.

தனக்கு ஒப்புவமை இல்லாத இறைவனது பாதங்களைச் சேராதவர்களுக்கு மனக்கவலையை மாற்றிக் கொள்ள முடியாது.

அறக்கடவுளான இறைவனுடைய திருவடிகளைச் சேராதவர்களுக்கு பொருள், இன்பம் ஆகிய பிற கடல்களை நீந்திக் கடக்க முடியாது.

இறைவனின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களால் மட்டும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர்களால் கடக்க முடியாது.

மனவலிமையால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்குபவனே முத்திக்கு விதை போன்றவன்.

சுவைத்தல், காணுதல், உணர்தல், கேட்டல், மணத்தல் என்னும் ஐந்தினதும் வகைகளை அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்தி வாழ்பவனின் அறிவில் உலகம் தங்கியுள்ளது.

பற்றில்லாதவனாகிய இறைவனின் மீது மட்டும் பற்றுக் கொள்ளல் வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அப்பற்றைப் பற்றுதல் வேண்டும்.

பகவத்கீதையும் திருக்குறளும் மனதைக் கட்டுப்படத்தும் வழிகளைப் பற்றிக் கூறியுள்ளன. “மனதைப் பயிற்சியினால் கட்டுப்படுத்த வேண்டும்” என்கிறது கீதை.

மனதைத் திடப்படுத்தியவனுக்கு மனக் கலக்கம் இருக்க மாட்டாது.

உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் சமமாக மதிப்பவனின் மனம் திடமுள்ளதாக இருக்கும்.

துன்பங்களும் இன்பங்களைப் போலவே இறைவனால் தரப்பட்டவை, அவற்றை இறைவன் நீக்குவானென்று நினைப்பவனின் உள்ளம் உறுதியானது, வைராக்கியம் மிக்கது.

சிற்றின்பங்களை மனதும் உடலும் மட்டும் தான் அனுபவிக்கும், பேரின்பத்தை ஆத்மா அனுபவிக்கும் என்று உணர்ந்தவனின் மனம் அசையாது.

தீயவழிகளில் செல்லும் மனதைத் திசை திருப்பி இறைவன்பால் செலுத்துவதன் மூலம் நன்மை பெறலாம் என்று நினைப்பது உறுதியான மனது.

சஞ்சலங்கள், துன்பங்கள், சோதனைகள், இன்பங்கள் ஏற்பட்டாலென்ன ஏற்படாவிட்டாலென்ன தினமும் தியானம் செய்யும் மனம் கலக்கமடையாது.

தியானத்தில் இருக்கும் போது மனம் இறைவனிடத்தில் இருத்தல் வேண்டும். தியானத்தில் இருக்கும் போது வேறு நினைவுகள் ஏற்பட்டால் மனம் அலைபாயும். அதனால் பலன் உண்டாகாது.

மனம் எதற்கும் கட்டுப்படாதது. அதைத்தேவர்களால் கூடக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அழகிய பூவைக் கண்டால் ஆசைப்படும்.

அழகிய பெண்ணைக் கண்டால் மோகப்படும்.

பொன் பொருளைக் கண்டால் அவாப்படும்.

உணவைக் கண்டால் அவாப்படும்.

வயிறு நிறைய உண்டவனும் சுவையான உணவைக் கண்டால் ஆசைப்படுவான்.

மனைவியும், பல ஆசை நாயகிகளும் உள்ளவனும் பெண்களைக் கண்டால் காம வசப்படுவான்.

கோடிக்கணக்காகச் சொத்துச் சேர்த்து வைத்திருப் பவனும் மேலும் மேலும் சொத்துச் சேர்க்க ஆசைப்படுவான்.

இப்படியான தன்மைகள் பல கொண்டதுதான் மனது. அலைபாயும் மனதைப் பற்றியும், அதனால் வரும் கேடுகளைப் பற்றியும் கூறியுள்ள கீதை. அதை அடக்கும் வழிகளையும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளது.

“மனம் அடங்கியவன் கடவுளாகிவிடுவான். அவனுக்கு மறுபிறப்பு இல்லை” என்றும் கீதை கூறுகிறது.

பகவத்கீதை மனிதனின் நல்வாழ்வுக்காகப் பல தத்துவங்களையும் நடைமுறைகளையும் கூறியுள்ளமையால் அது மனித வாழ்வின் மேம்பாட்டைக் கூறும் அரிய நூல் என்று அறிஞர்கள் சொல்வார்கள்.

பிறப்புக்குக் காரணமாவது இறப்பு. மனதை அடக்கி அதை இறைவன்பால் வைத்தவர்கள் நல்ல நேரத்தில் இறப்பார்கள். அவர்கள் மேன்மையான குடியில் மேன்மை

உள்ளவர்களாகப் பிறந்து நல்வாழ்வு வாழ்வார்கள். உயிர்களுக்குப் பல் பிறப்புக்கள் உண்டு.

இதை இதிகாச புராணங்கள் கதைகள் மூலமாகக் கூறுகின்றன.

வேதங்களின் இறுதிப்பகுதியான உபநிடதங்களின் கதைவடிவம் தான் இதிகாச புராணங்கள்.

தத்துவங்கள் உயர்ந்தவர்கள், கல்வியாளர்களுக்குத் தான் புரியும். கதைகள் பாமரர்களுக்கும் புரியும்.

நான் ஆத்தி சூடிச் சூத்திரங்களுக்குக் கதை எழுதிய போது பலர் பாராட்டினார்கள். நீங்கள் ஆத்திசூடிச் சூத்திரங்களுக்குக் கதை எழுதியமையால் சிறுவர்கள் கூட இலகுவில் அதைப்புரிந்து கொண்டனர். “ஙப்போல் வளை” என்ற ஆத்திசூடிச் சூத்திரத்தின் கருத்து எனக்கு இதுவரை விளங்கவில்லை. உங்களது கதையை வாசித்த பின்புதான் அறிந்து கொண்டேன்.” என்று ஓர் ஆசிரியர் கூறினார்.

அதன் பின் தான் நான் திருக்குறள் பாக்கள் 1330 இற்கும், பகவத்கீதையின் சுலோகங்கள் 700 இற்கும் கதைகள் எழுதினேன். அது உலகெங்கும் பாராட்டைப் பெற்றது.

மணிமேகலைப் பிரசுரத்தினர் எனது திருக்குறள் கதைகளைுக்கு எழுதிய பதிப்புரையை இங்கு தருகிறேன்.

அன்று புராண புருடர் ஸ்ரீ மஹாவிஷ்ணு வாமனர் அவதாரம் எடுத்து மாபலிச் சக்கரவர்த்தியின் செருக்கை அடக்கியருளினார். மூன்றடி நிலம் யாசித்து முதலிரு அடிகளால் மண்ணையும் விண்ணையும் அளந்தெடுத்த பிறகு, மூன்றாவது அடிக்கு இடமில்லது போகவே, மாபலி மாமன்னன் தன் சிரம் தாழ்த்தி அதன்மேல் அவதார புருடரின் அடியைத் தாங்கி

விஷ்ணுவைப் பணிந்தான். அதன் மூலம் அவன் செருக்கு அழிந்தது.

இன்று உலகெங்கும் அராஜகம் தலைவிரித்தாடும் வேளையில் மேற்படி புராணக்கதையின் பெருமையை நாம் நினைவுகூர்வதே போன்றதொரு அதிசயத்தை யாழ்ப்பாண வலய நல்லூர் கல்விக்கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் நிகழ்த்திக் காட்டியுள்ளார். இதுவரை வள்ளுவனின் திருக்குறளுக்குப் பல தமிழ் மூதறிஞர்கள் உரைகள் எழுதியுள்ளனர். இவற்றையும் மிஞ்சி, குறட்பா ஒவ்வவொன்றின் பொருளையும் நயத்தையும் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்தறியும் பொருட்டு, அனைத்துக் குறட்பாக்களின் அடியொற்றிப் பொருள் நயம் சிதைவுறாமல், கதாபாத்திரங்கள் வாயிலாக மக்கள் நலன் கருதி, மூன்று பக்கங்களுக்கு மிகாமல் கதைகளை அமைத்து வரலாறு படைத்துள்ளார் திரு. குணசேகரம் அவர்கள். ஒவ்வொரு குறளுக்கும் ஒரு கதை. இவையாவும் ஒரே தொடராக அமைந்து வருவதென்றால் அதன் சிறப்பை உணர்த்திக்காட்ட யாம் சொற்களைத் தேட வேண்டியுள்ளது. இரண்டே அடிகளை ஆதாரமாகக் கொண்டு, மூன்று பக்க அளவில் ஒரு கதை, அடுத்தடுத்து வரும் குறள்களுடன் ஒவ்வொரு கதையும் பின்னிப்பிணையும் நேர்த்தியை திரு. குணசேகரம் அவர்கள் எவ்வளவு எளிதாக வெளிப்படுத்துகிறார் என்பது அவர் மட்டுமே அறிந்துள்ள புதிர்.

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு” என்று மகாகவி பாரதி செந்தமிழ் நாட்டின் சிறப்பையும், அது சிறப்படையக் காரண புருடனாக விளங்கிய வள்ளுவனையும் ஏத்தித் தொழுதுள்ளார். வள்ளுவன்

புகழ் எல்லையில்லா வானம் போல் நிலைத்து நீடிக்க, அப்பெருந்தகை யாத்தருளிய குறட்பாக்களில் வரைவிலக்கணமாய் திகழும் வாழ்விலக்கணங்களை அடித்தளமாகக் கொண்டு கதைகள், கட்டுரைகள், இசைக்கீதங்கள், நாடகங்கள், நாட்டியங்கள் எனப்பல துறைகளிலும் நூலாக்கங்கள் தோன்றிய வண்ணம் இருக்க வேண்டும். இந்த நற்பணியை நயம்பெறச் செய்து முடிக்கும் நற்றமிழிதயங்கள் வரிசையில் தற்போது குணசேகரம் அவர்களும் சேர்ந்திருப்பது செந்தமிழ் நாட்டின் சிறப்புக்கு மேலுமொரு மயிலிறகணி மாமகுடமாக அமைகிறதெனலாம்''.

விநாயக புராணத்தில் முற்பிறப்புப்பற்றிக் கூறப்பட்ட சில கதைகளை நான் இங்கு தருகிறேன்.

காந்தர்மன் என்றொரு அரசன் இருந்தான். அவன் நீதி நெறி முறை தவறாது தனது நாட்டை ஆண்டு வந்தான்.ஒரு நாள் பிருகு முனிவர் அவனது அரண்மனைக்கு வந்தார். மன்னன் அவரை ஆசனத்தில் இருத்திப் பணிவிடைகள் பலவும் செய்தான். அதனால் பிருகு முனிவர் மனம் மகிழ்ந்தார். அப்பொழுது காந்தர்மன் பிருகு முனிவரிடம் தனது முற்பிறப்பைப் பற்றிக்க கூறும்படி கேட்டான்.

அதற்கு உடன்பட்ட பிருகு முனிவர் அவனது முற்பிறப்பைப் பற்றிக் கூறினார், ''மன்னா, நீ முற்பிறப்பில் வைசிகனாக இருந்தாய், எனினும் உன்னிடம் பெருஞ்செல்வம் இருக்கவில்லை. அதனால் உனது குலத்திற்குரிய தானதருமங்களை உன்னால் செய்ய முடியவில்லை. அதனால் உறவினர்களும், அயலவர்களும், யாசிக்க வந்தவர்களும் உன்னை வெறுத்து ஒதுக்கினார்கள். அதனால் மனமுடைந்த நீ

காட்டு வழியாகச் சென்றாய். வழியில் சபரி முனிவரைக் கண்டு, அவரை வணங்கி உனது குறைகளைக் கூறினாய். முனிவர் உன்மீது இரக்கப்பட்டு விநாயகரின் மஹாமந்திரத்தை உனக்கு உபதேசித்து அதைத்தினமும் மூன்று முறை ஓதும்படி கூறினார்''

''அதன்படி நீ விநாயகர் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்துத் தினமும் விநாயகரின் மஹா மந்திரத்தை மூன்று முறை ஓதிவந்தாய். அதனால் நீ பெரும் செல்வந்தனானாய். உன்னை வெறுத்து ஒதுக்கியவர்கள் எல்லோரும் நீ பணக்காரனானதும் உன்னை வந்தடைந்தனர். அதன்பின் தான தருமங்கள் செய்து விநாயகரை வணங்கியமையால் இந் நாட்டு அரசனானாய்'' என்றார்.

ஒரு நாள் நளமகாராஜனது அரண்மனைக்குக் கௌசிக முனிவர் வந்தார். நளன் அவரை வரவேற்று உபசரித்துப் பணிவிடைகள் பலவும் செய்தான். அதனால் மனம் மகிழ்ந்த கௌசிக முனிவர் நளமகாராஜனுடைய பூர்வீகக் கதையைச் சொன்னார்.

''மன்னா, நீ சென்ற பிறவியிலே கவுடதேசத்து மன்னனாக இருந்தாய். முன்செய்த தவப்பலத்தால் இப்பொழுது நிடத நாட்டு அரசனாக இருக்கிறாய்'' என்றார்.

காவிரி நதிக்கரையில் உள்ள ஒரு நாட்டை கிருத்தவீரியன் என்ற அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவனது மனைவியின் பெயர் சுகந்தை. அவர்களுக்குப் புத்திரபாக்கியம் இல்லாமை யால் அவர்கள் காட்டுக்குச் சென்று தவம் செய்தனர்.

நாரத முனிவா் ஒருநாள் கிருத்தவீரியனது தந்தையின் அரன்மனைக்கு வந்து; ‘‘மன்னா, உனது மகன் அன்ன ஆகாரமின்றிக் காட்டில் தவம் செய்கிறான். அதனால் எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை. அதனால் நீ பிரம்ம தேவரைச் சந்தித்து அதற்கான வழிவகைகளைச் செய்’’ என்று கூறிவிட்டுச் சென்றார்..

நாரதரின் சொற்படி கிருத்தவீரியனது தந்தை பிரம்ம தேவரைச் சந்தித்துத் தனது மகனின் நிலையை எடுத்துரைத்தார்.

‘‘மன்னா, உனது மகன் கிருத்தவீரியன் முற்பிறப்பில் சாம்பன் என்ற பெயரோடு அந்தணனாக இருந்தான். அவனுக்குக் கணேசன் என்றொரு மகன் இருந்தான். வறுமை காரணமாக அவன் வழிப்பறி செய்து சீவித்து வந்தான். ஒரு நாள் அவா்களுக்கு உண்ண உணவேதும் கிடைக்கவில்லை. அதனால் வழிப்பறிசெய்யச் சென்றான். அப்போது அவ்வழியால் வந்த பன்னிரண்டு பிராமணா்களைச் சாம்பன் அடித்துக் கொன்று விட்டு அவா்களது பொருட்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்தான். வீட்டுள் யாரும் இல்லாதிருந்ததால், ‘‘கணேசா, கணேசா’’ என்று அழைத்துக் கொண்டு வீடு முழுவதும் தேடினான். வீட்டின் பிற்பகுதியில் அவனது மகன் பசியால் இறந்து கிடந்தான். அன்று சங்கட சதுா்த்தித் தினம் அன்று முழுவதும், ‘‘கணேசா, கணேசா கணேசா’’ என்று அழைத்தமையால் அவனுக்கு இப்பிறப்பில் அரசபதவி கிடைத்துள்ளது. பிராமணா்களைக் கொன்றமையால் அவனுக்குப் பிரம்மஹத்தி தோசம் பிடித்துள்ளது. அவனுக்ககுப்

பிள்ளைப் பாக்கியம் கிடைக்க வேண்டுமானால் சங்ஹட சதுர்த்தி விரதம் அனுட்டித்தல் வேண்டும்'' என்றார் பிரம்மதேவர்

விந்திய மலைக்கு அருகே கொல்லம் என்றொரு நகரம் இருந்தது. அங்கு சித்ரூபன் என்றொரு வணிகன் இருந்தான். அவனது மகன் காமாந்தன்.

காமாந்தன் இயல்பாகவே கெட்டவன். அவன் தீயவர்களுடன் சேர்ந்து பல தீமைகளை மக்களுக்குச் செய்தான். பிராமணர்களைக் கொன்றான்.

அதன்பின் திருந்தி, பாழடைந்த விநாயகர் ஆலயம் ஒன்றைத்திருத்திக் கும்பாபிஷேகம் செய்வித்தான்.

தான தருமங்கள் யாவும் செய்தான்.

அவன் இறந்ததும் யமதூதுவர் அவனைக் கவர்ந்து சென்று யமதர்ம ராஜனின் முன்விட்டனர்.

யமதர்ம ராஜன் அவனைப் பார்த்து; ''காமாந்தா, நீ கணக்கிலடங்காத தீமைகளைச் செய்துள்ளாய். இருப்பினும் நல்ல செயல்களையும் செய்துள்ளாய். நீ செய்த பாவ புண்ணியங்களுக்கான பயனை அனுபவித்தே தீர வேண்டும். அதை நீ உனது விருப்பப்படி அனுபவிக்கலாம்.'' என்றான்.

அதைக்கேட்ட காமாந்தன்; ''புண்ணியத்தின் பயன் களையே நான்முதலில் அனுபவிக்கவிரும்புகிறேன்'' என்றான்.

அதன்படி காமாந்தன் சௌரஷ்டிர சேதத்தின் அரசனுக்குச் 'சோம காந்தன்'' என்ற பெயரோடு மகனாக வந்து பிறந்தான்.

சோமகாந்தனின் புண்ணிய காலம் முடிந்ததும் அவனுக்கு குஷ்டரோகம் பிடித்தது.

நோய் குணமாகாததால் சோமகாந்தன் அரசைத் துறந்து காட்டுக்குச் சென்று தவம் செய்தான்.

ஒரு நாள் பிருகு முனிவரைச் சோம காந்தன் சந்தித்தான்.

அவர் தனது கமண்டலத்தில் இருந்த புனித நீரை எடுத்துச் சோமகாந்தன் மீது தெளித்தார்.

நீர்பட்டதும் அரசனைப் பற்றிப் பிடித்திருந்த பிரம்மஹத்தி வெளிப்பட்டது. அதனைக்கண்ட பிருகு முனிவர், "பூதமே, நீ யார்?" என்று கேட்டார்.

"நான் இவனைப் பற்றிப் பிடித்திருந்த பிரம்மஹத்தி" என்றது அப்பூதம். இவ்வாறு விநாயக புராணம் முற்பிறப்பில் நடந்தவற்றைக் கூறுகிறது.

இதைவிட இதிகாசங்கள் பலரின் முற்பிறப்புப் பற்றிக் கூறுகின்றன.

அடுத்துக் கீதை மரணத்தைப்பற்றிச் சொல்வதைப் பார்ப்போம்.

மரணம் என்பது இறைவனால் குறித்து வைக்கப்பட்ட ஒரு நிகழ்வு.

அது குறிக்கப்பட்ட நேரம் நடக்கும்.

ஞானிகள், உயர்ந்தவர்கள், ஒழுக்கசீலர்கள். பெரியோர்கள் தமது மரணத்தைப் பற்றி எண்ணமாட்டார்கள்.

தமது வேலை முடிந்து விட்டபின் தங்கியிருப்பதில் அர்த்தமில்லை என்று இவர்கள் நினைப்பார்கள்

மக்களுக்கு மரணம் ஒரு சாதாரண நிகழ்வு.

ஞானிகளுக்கு, உயர்ந்தவர்களுக்கு, ஒழுக்கசீலர்களுக்கு, பெரியோர்களுக்கு அது ஒரு வரலாறு.

வேதவியாசர், விஷ்வாமித்திரர், பிருகு முனிவர், கௌசிக முனிவர் போன்றோர் வாழ்ந்த காலம் எது? பல்லாயிரம் வருடங்கள் சென்றும் அவர்களது வரலாறு பேசப்படுகிறது.

திருவள்ளுவர் கம்பர், காளிதாசன் போன்றோரது வரலாற்றை அறியாதவர் யார்? இவர்கள் வாழ்ந்த காலம் எது?

மஹாத்மாகாந்தி, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், போன்றோரின் வரலாறு மனிதன் உள்ள வரை பேசப்படும்.

சிபிச்சக்கரவர்த்தி, மனுநீதி கண்ட சோழன், பொற்கைப் பாண்டியன் போன்ற பல்லாயிரக் கணக்கான ஒழுக்க சீலர்கள் பல்லாயிரமாண்டுகளாக மக்களின் மனதில் நிறைந்திருக் கிறார்கள்.

மனிதனின் மரணம் முடிவல்ல.

அது வளரும் அனுமானின் வாலைப்போன்றது

வேதம் மக்களை நான்கு வகையாக வகுத்தது.

பிராமணன் , சத்திரியன், வைசிகன், சூத்திரன்

இந்த நான்கு வர்ணத்தினருக்கும் உள்ள தொழில்களை வேதம் வகுத்தது.

பகவத்கீதை இந்த நான்கு வர்ணத்தினருக்கும் மூன்றே மூன்று குணங்கள் உள்ளதாகச் சொல்கிறது

சத்துவகுணம், இராஜச குணம், தாமஸ குணம்,

பிராமண, சத்திரிய, வைசீக, சூத்திரர்களுடைய கடமைகளும் பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளன. இவை அவரவர் இயல்பில் உதித்த குணங்களுக்கமைவாகவே பிரித்துச் சொல்லப்பட்டுள்ளன.

“அகக்காரணங்களை அடக்குதல், புறக்காரணங்களை அடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை சாஸ்திர ஞானம், அனுபவ ஞானம், ஈஸ்வரநம்பிக்கை இவை யாவும் இயல்பாக உண்டாகிய பிராமண கர்மங்களாகும்”

“சூரத்தன்மை, துணிவு, உறுதி, சாதுர்யம், போரில் புறங்காட்டாமை, கொடை, இறைமை ஆகியவைகள் இயற்கையில் உண்டாகிய சத்திரிய கர்மங்களாகும்.”

“உழவும் கால்நடை காத்தலும் வாணிகமும் இயல்பாயுண்டாகிய வைசிக கர்மங்களாகும். இட்ட பணி ஆற்றுவது சூத்திரனுக்கு இயல்பாயுண்டாகிய கர்மம்” இம்மூன்றால் தான் மனித மனங்கள் அல்லற்படுகின்றன. என்றும் கீதை கூறியுள்ளது.

இம்மூன்று குணங்களும் தான் மக்களின் வாழ்வைத் தீர்மானிக்கின்றன.

“நீ, வாழ்ந்த வாழ்க்கையின் பலன்தான் சொர்க்கமும் நரகமும்”.

ஒழுக்கமான வாழ்வு வாழும் ஒருவன் நல்ல முகூர்த்தத்தில் மரணமடைந்து, பின் நல்ல குடும்பத்தில் பிறந்து நல்வாழ்வு வாழ்வான். அவன் சொர்க்கத்தைத் தனது வீட்டிலேயே அனுபவிப்பான்.

தீமைகள் செய்பவன் தீய முகூர்த்தத்தில் இறந்து பின் தீய குடும்பத்தில் பிறந்து நரக வாழ்வைத் தனது வீட்டிலேயே அனுபவிப்பான்.

இவ்வாறு பகவத்கீதை கூறுகிறது.

“மரண காலத்திலும் என்னையே நினைத்துக் கொண்டு உடலைத் துறந்து யார் போகிறானோ அவன் என்சொரூபத்தை அடைகிறான். இதில் ஐயமில்லை”.

“இறுதிக்காலத்தில் எப்பொருளை எண்ணிக் கொண்டு ஒருவன் உடலை உகுக்குகிறானோ, எப்பொழுதும் அப் பொருளைப் பாவிப்பவனாகிய அவன் அதையே அடைகிறான்”

“தீ, ஒளி, பகல், சுக்கிலபட்சம், உத்தராயணத்தின் ஆறு மாதங்கள், இவைகளில் உடலை நீத்துப்போகின்ற பிரம்ம ஞானிகள் பிரம்மத்தை அடைகின்றனர்”

“புகை, இரவு, கிருஷ்ண பட்சம், தட்சணாயத்தின் ஆறுமாதங்கள், இவைகளில் உடலை நீத்துப் போகின்ற யோகிகள் சந்திரனது ஒளியைப்பெற்றிருந்து மறுபிறவியை அடைகின்றனர்.”

இவற்றை விடக் கீதையில் மஹாவிஷ்ணு தன்னை அடையும் வழிகளைப்பற்றியும் கூறுகிறார்.

“தீமைகள் செய்யாது, சந்தேகமின்றி, இந்திரியங்களை அடக்கி, உயிர்களின் மகிழ்வில் தான் மகிழும் மக்கள் என்னை வந்தடைவர்”

“விருப்பு வெறுப்புக்களிலிருந்து விடுபட்டு, மனதை அடக்கி வாழ்பவன் இலகுவாக என்னை அடைவான்”.

“இம்மையில் சரீரத்தை விடுக்குமுன் காமம், குரோதம் இவைகளை விலக்கி மனஅமைதியுடன் வாழ்பவன் என்னை அடைவான்.

“அறிவிலி, சிரத்தையில்லாதவன், ஐயமுறுபவன் ஆகியவர்களுக்கு இவ்வுலகும் இல்லை, அவ் உலகும் இல்லை.”

“வேறு எண்ணங்களின்றி யார் என்னைத் தினமும் வணங்குகிறானோ, அந்த ஒரு நிலைப்பட்டவனுக்கு நான் இலகுவில் அகப்படுவேன்”.

“யார் என்மீது தீராத அன்பு கொண்டு இலை, புஸ்பம், நீர் முதலியவற்றைப் படைக்கிறானோ, அந்த பக்திமான் எனது பிரியத்துக்குரியவனாகிறான்”

மரணம், பிறப்பு, பிறப்பின்மை பற்றித் தெளிவாகப் பகவத்கீதை கூறுகிறது.

மரணம் ஆத்மாவிற்கு விடுதலை அளிக்கும்.

உடலுக்கேற்பட்ட துன்பத்தை நீக்கும்.

இறைவனை அடைந்து பேரின்ப வாழ்வு வாழ வழிவகுக்கும்.

நல்ல குடும்பத்தில் வசதிகளோடு வாழ வழி வகுக்கும்.

மேற்கூறப்பட்டவை புண்ணியம் செய்த ஆத்மாக்களுக்கு உரியவை.

பாவம் செய்த ஆத்மாவிற்கு மரணம் பெரும் துன்பங்களைக் கொடுக்கும்.

ஆத்மாவிற்கு விடுதலை கொடுக்காது; திரும்பத்திரும்ப பிறந்து பிறந்து துன்பத்தில் அமிழ வைக்கும்.

பிறப்புக்கள் தோறும் உடலுக்குப் பெருந்துன்பங்களைக் கொடுக்கும்.

இறைவனின் பாதங்களை மறைக்கும்

இவ்வாறு இந்து தத்துவங்கள் கூறுவதையே பகவத்கீதையும் கூறுகிறது.

“அடுத்துக் கன்மங்களைப் பற்றிப் பகவத்கீதை கூறுவதைப் பார்ப்போம்.

“யாரும் ஒரு கணப்பொழுது கூடச் செயலற்று இருப்ப - தில்லை மாயையின் செயற்பாட்டால் ஒவ்வொரு உயிரும் தன் வயமின்றிக் கர்மம் செய்கிறது”.

“இந்திரியங்களை மனதால் அடக்கிப் பற்றற்று, கர்மேந்திரியங்களைக் கொண்டு கர்மம் செய்பவனே மேலானவன்”

“உணவை உண்பது கர்மம், அதைச் சுவைத்து உண்பது ஞானம், சுவையை ரசித்து மகிழ்ந்து இன்பங்கொள்வது போகம், அந்த இன்பம் கடவுளின் அனுக்கிரகம் என்று நினைப்பது யோகம்”. இவ்வாறு பகவத்கீதை கூறுகிறது.

“நித்திய கர்மத்தை நீ செய். செயலின்மையை விடச் செயல் சிறந்தது. செயற்படாதவன் தனது உடலைக்கூடப் பேணமாட்டான்”.

“பெரியவர்கள் எல்லோரும் கர்மம் செய்ததினாலேயே முத்தியடைந்துள்ளார்கள். உலகம் நல்வழியில் நடக்க வேண்டுமானால் கருமம் ஓயாது செய்தல் வேண்டும்”.

“மேலோன் எக் கருமத்தைச் செய்கிறானோ, அதையே சாதாரண மக்களும் செய்வர். அவன் எதைப்பிரமாண மாக்குகிறானோ அதையே உலகம் அனுசரிக்கும். அதனால்

கர்மம் செய்யும் போது பற்றில்லாமல் நடுவுநின்று செய்தல் வேண்டும்.''

''பாமரர்கள் பற்றுடன் கர்மம் செய்கிறார்கள். அது போலப் பற்றில்லாது உலக நன்மைக்காகப் பெரியோர்கள் கர்மம் செய்தல் வேண்டும். பெரியவர்கள், பாமரமக்களது மனதில் கலக்கத்தை உண்டுபண்ணாது, எல்லாக் கருமங்களிலும் தாமே ஈடுபட்டுக்கொண்டு மற்றவர்களையும் கர்மத்திலீடுபடுத்துதல் வேண்டும்.

''இயற்கையின் தூண்டுதலால் கர்மங்கள் செய்யப்படுகின்றன. அகங்காரம் உடையவன் அக் கருமத்திற்குத் தான் தான் கர்த்தா'' என்று நினைக்கிறான்.

''கர்மமெல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, ஆசையையும், ஆணவத்தையும் அகற்றி, மனக்கொதிப்பின்றிக் கடமையைச் செய்''

''ஆசைதான் மனிதனின் சத்துரு. அது காம வடிவெடுக்கும். அதன் போக்கைக் கட்டுப்படுத்த முடியாது. ஆசையினால் மெய்ஞானம் மூடப்பட்டிருக்கும்''

இவ்வாறு மனிதனின் பிறப்பு, கர்மம், இறப்பு, மறுபிறவி, பிறவாமைபற்றி விளக்கமாக பகவத்கீதை கூறுவதால் அதை இந்து தர்ம நூல் என்று கூறுவதை விட வாழ்வியல் நூல் என்று கூறுவதே பொருத்தமானதாக அமையும்.

## நீதி, நியாயம், தர்மம்

நீதி, நியாயம், தர்மம் பற்றி இந்து சமயங்கள் என்ன கூறுகின்றன என்று அறிதல் வேண்டும். ‘‘நீதி என்றால் நடுவு நிலமையில் நின்று தீர்ப்புக் கூறுதல்’’ என்று சொல்லப்படுகிறது.

ஒரு குற்றத்தைச் செய்தவனைக் காவற்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கின்றனர்.

அங்கு குற்றம் செய்தவனுக்காக நியாயவாதிகள் வாதிடுகின்றனர். பாதிக்கப்பட்டவருக்காகவும் நியாயவாதிகள் வாதிடுகின்றனர்.

சந்தர்ப்ப சூழ்நிலைகள், சாட்சியங்கள், தகுதி என்பவற்றை வைத்துத்தான் வழக்குகளில் தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

சில சமயங்களில் நிரபராதிகள் தண்டனைக் குள்ளாகின்றனர். பணத்தின் பெறுமதி நீதியை மறைப்பதுண்டு.

நியாயவாதிகளின் வாதத்திறமை குற்றவாளிகளை விடுவிப்பதும் உண்டு.

பெரும்பாலான வழக்குகளில் நீதி கிடைப்பதில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் வருந்துவதுண்டு.

பத்தாயிரம் ரூபா பெறுமதியான காணிக்குப் பல இலட்சம் ரூபா செலவு செய்து வழக்கை நடத்தி வெற்றி பெறுபவர்கள் இருக்கிறார்கள். அக்காணி வழக்கில் பல இலட்சம் ரூபா செலவு செய்து தோற்றவர்களும் இருக்கிறார்கள்.

அயலவர், பகைவர், நண்பர், உறவினர் என எத்தரப்பினராக இருந்தாலும் நடுவுநிலையோடு நடந்ததால் அதுதான் நீதி.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

பக்கம் சாராது செயற்படும் தராசைப் போல், பக்கம் சாராது நடுவு நிலைமையைப் போற்றுவது சான்றோர்க்கு அணியாகும்.

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.

உள்ளத்தில் பக்கச்சார்பு இல்லாத தன்மை உறுதியாக இருந்தால், சொல்லிலும் பக்கச்சார்பு இராது.

இவ்வாறு நடுவுநிலைமை பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

நடுவுநிலை தவறியவன் பணக்காரனாக வாழ்ந்தாலும் அதனால் உண்டாகும் பழி அவனது பரம்பரையையும் தாக்கும்

ஒருவனது மனம் நடுவுநிலமையிலிருந்து விலகும்போது நானும் எனது பரம்பரையும் இதனால் கெடப்போகிறோம் என்ற நினைவு அவனுக்கு வரல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் நியாயம் உள்ளவனாக வாழவேண்டும்.

ஒவ்வொருவரும் தத்தமக்கென உள்ள கருமங்களை நீதியோடும் நியாயத்தோடும் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் நீதிமன்றம் சென்று வழக்காட வேண்டிய தேவை உண்டாகாது. சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நீதிமன்றங்களுக்குச் செல்வோர் மிகமிகக் குறைவு. ஊரில் உள்ள பெரியவர்கள் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துச் சமரசம் செய்து வைப்பார்கள். சம்பந்தப்பட்டவர்கள் அவர்களின் தீர்ப்பை மனங்கோணாது ஏற்றுக்கொள்வார்கள். இப்படித்தீர்ப்பு வழங்கும் பலர் பாடசாலைக்குச் செல்லாதவர்களாவர். நீதிநியாயங்களைக் கூறப்படிக்கத் தேவையில்லை.

நடுவுநிலையாளர்கள், மன அடக்கமுள்ளவர்கள், ஒழுக்கமுடைய வர்கள், பொறுமை உள்ளவர்கள், பொறாமை இல்லாதவர்கள், புறம் கூறாதவர்கள், எல்லா உயிர்களிலும் அன்புள்ளவர்கள், அருள் உள்ளவர்கள், பிறருக்குக் கொடுத்து உதவுபவர்கள், ஒழுக்கமாக வாழ்வதால் உண்டாகும் புகழை விரும்புபவர்கள் ஒரு போதும் நீதி தவறி நடக்க மாட்டார்கள்.

இவை கல்வியால் மட்டும் உண்டாவதில்லை. இயற்கையாகவே இக் குணங்கள் நல்ல குடியில் பிறந்தவர்களுக்கு இருக்கும்.

சிலர் கல்வி கற்று நியாயவாதிகளாக வருகிறார்கள். நற்குடியிற் பிறந்தவர்கள் தமது குடியின் பெருமையைக் காப்பாற்றுவதற்காக ஒழுக்கம் தவறாது நடுநிலை நின்று வாதாடித் தர்மத்தைக் காப்பாற்றுவார்கள்.

இயல்பாகவே தீயகுணங்கள் நிரம்பப் பெற்ற குடியில் பிறந்து, கல்வி கற்று நியாயவாதியானவர்கள் பணத்திற்காக எந்தப் பாவக் காரியத்தையும் செய்வார்கள்

உயிரினும் மேலாகப் பேணவேண்டியது அறத்தையே. தர்மத்தைப் போற்றுவதால் அறம் வளர்க்கப்படுகிறது. நீதியிலிருந்து விலகுவதால் தீமைகள் மேலோங்குகின்றன. தீமைகளைச் செய்பவன் மனிதன் ஆகான். நீதியாளனாக இருக்க வேண்டியவன் நீதி தவறி நடப்பதன் மூலம் பெரும் பழியைப் பெறுவான். ஒருமனிதனின் பரம்பரையின் சிறப்பைத் தீர்மானிப்பது அவனது சுதர்மம்.

எந்த மனிதன் எச் செயலுக்கு உரியவனாகிறானோ அச்செயல் அவனுடைய சுதர்மம்.

வாழ்க்கையில் தற்செயலாகப் பதவிகள் வந்தமையும், அவ்வேளைகளில் முறை பிறழாது தனது கடமையைச் செய்யும்

வல்லமையைப் பெறல் வேண்டும். நதியின்நீரோட்டத்தை எதிர்த்து ஓடத்தைச் செலுத்துவது போன்று அது இடர் சூழ்ந்த செயலாகும்.

படகோட்டி அந்த இடர்களை அறிந்தே அத்தொழிலை ஏற்கிறான். அதனால் ஆறுபெருகும் போதும், காற்று வீசும்போதும், வீசாத போதும், அது புயலாக மாறும் போதும் மனம் தளராது தான் செய்யும் தொழிலைச் சூழ்நிலைக் கேற்றவாறு செய்து பயணிகளைக் காப்பாற்றுகிறான்.

இதுபோல உயர்பதவிகள் பெற்றவர்கள் வல்லவராகி நீதியின்படி நடத்தல் வேண்டும்.

“நீதிநெறி முறையில் நடக்காதவர்கள் சுதர்மத்தையும் கீர்த்தியையும் இழந்து பாவம் செய்தவர்களாவார்கள். எல்லோராலும் இகழப்படுவார்கள். உயர்ந்த பதவிகளிலிருந்து போற்றப்பட வேண்டியவர்கள் தூற்றப்படுவது இறப்பதிலும் இழிவானது”.

இவ்வாறு பகவத்கீதை கூறுகிறது.

முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினைகளுக்கமையத் தான் வாழ்வு கிடைக்கிறது என்று விநாயகபுராணத்தில் வரும் கதைகள் மூலம் அறிந்து கொண்டோம். முற்பிறப்பில் நல்வினை செய்த காமாந்தன் மறுபிறப்பில் சௌராஷ்டிர தேசத்தின் அரசனாகப்பிறந்து பல்வேறு இன்பங்களை அனுபவித்தாக விநாயகபுராணத்தில் அறிந்தோம்.

இது போலவே முற்பிறப்பில் செய்த புண்ணிய பலன்களால் சிலருக்கு மேலான பதவிகள் கிடைக்கின்றன. அப்பதவி தனது “கல்வித்திறமையால் வந்தது, “பணத்தால்

வந்தது'' என்று எண்ணுபவர்கள் தான் தீய செயல்களைச் செய்து பாவத்தை அதிகரித்துக் கொள்கிறார்கள்.

தனது உயர்ச்சி ''கடவுள் தந்த பரிசு'' என்று நினைப்பவர்கள் மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் பயந்து தீமைகள் செய்யாது வாழ்வார்கள்.

எனக்குத்தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் ஓர் உயர் பதவிக்கு ஆசைப்பட்டார். மனைவியோ அவரை அப்பதவியைப் பெறாமல் வீட்டுக்கு வரக்கூடாது என்றாள். அதற்காகத் தனது நகைகளை விற்றுச் செலவு செய்யும்படி சொன்னாள்.

அவர் யார் யாரையோவெல்லாம் பிடித்தார். பணத்தைத் தண்ணீராகப் பாய்ச்சினார். அந்த உயர்பதவி அவருக்குக் கிடைத்தது.

அவர் நேர்மையாக நடக்கத் தீர்மானித்தார். நண்பர்களும், இனத்தவர்களும், தெரிந்தவர்களும் விடவில்லை.

அவரது மனைவி பணத்தை வாங்கிக் கொண்டு பலருக்கு நீதிக்குப்புறம்பான நிலையில் நியமனங்களும், பதவி உயர்வுகளும் கொடுக்கும்படி வற்புறுத்தினாள்.

பிற்காலத்தில் அதனால் அவருக்குப் பெருந்துன்பங்கள் உண்டாயின. வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். பின்பு இடமாற்றப்பட்டார்.

நல்வினை, தீவினைப் பயன்கள் மறுபிறவியில் தான் கிடைக்கும் என்பதில்லை. வாழும் போதே அவைகிடைக்கும்.

நாவலூரில் வேலாயுதம் என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு சிறிய பலசரக்குக்கடை வைத்து நடத்தி வந்தான். நல்ல குணங்கள் எவையும் அவனிடம் இருப்பதில்லை.

ஆனால் பொருட்களின் நிறையைக் குறைத்தோ, விலையைக் கூட்டியோ விற்கமாட்டான்.

கோயில் திருப்பணிக்கென யாராவது சென்றால் ‘கடவுளுக்கு ஏன் கோயில்? ஆலமரநிழலில் அவர் இருப்பார். வேண்டுமானால் கூரை போடுங்கள்’ என்பான்.

யாராவது இரக்கப் போனால், “உலகில் எவ்வளவோ தொழில் இருக்கு. உழைத்து உண்” என்பான்.

நோயாளர்கள், வயோதிபர்கள் கடனாகப் பொருள் கேட்டால் கொடுக்க மாட்டான். “நோய், வயோதிபம் வரும் என்று நினைத்துப் பிற்காலவாழ்விற்கெனச் சேமிக்க வேண்டும்” என்பான். பிள்ளைகள் அவர்களுக்கிருந்தால், “உங்களது பிள்ளைகளுடன் போய் இருங்கள்” என்பான்.

இவ்வாறு அவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகப் பேசி அவர்களைக் கலைத்துவிடுவதால் யாரும் அவனிடம் உதவி கேட்டுச் செல்வதில்லை.

கதிரேசன் என்றொரு வயோதிபர் அக்கிராமத்தில் வாழ்ந்து வந்தார். மிகவும் வறியவர் அவர். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். ஒன்று ஊமை, அடுத்தவன் மூளைவளர்ச்சி குறைந்தவன். அதனால் வயோதிபம் அடைந்த நிலையிலும் அவர் உழைத்து வந்தார்.

வேலாயுதத்தின் கடைக்குக் கதிரேசன் சென்று பொருட்களை வாங்குவார். தன்னிடமிருக்கும் பணத்திற்கு அளவாகவே அவர் பொருட்களைக் கேட்பார்.

“கதிரேசப்பு, இது மூன்று பேருக்குக் காணுமோ?” என்று கேட்பான் வேலாயுதம்.

“காணாட்டால் என்ன தம்பி செய்வது? கடன்பட எனக்கு விருப்பமில்லை” என்பார் கதிரேசன்.

வேலாயுதம் அவர் கேட்பதிலும் அதிகமாகப் பொருட்களைக் கொடுத்து விட்டு, “உன்னட்டைக் காசிருந்தால் தா” என்பான்”

“கணக்கு எவ்வளவு?”

“உன்னிடம் எவ்வளவு காசு இருக்கு..?”

“நாற்பது ரூபா”

“சரி இருபது ரூபா தா” என்பான் வேலாயுதம். சில சமயங்களில் “காசுவேண்டாம் கொண்டு போ” என்பான்”

கதிரேசனால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கடைக்குச் செல்லாவிட்டால் , கடைக்குச் செல்பவர்களிடம் கதிரேனைக் கடைக்கு வரும்படி சொல்லியனுப்புவான்.

கதிரேசு கடைக்கு வந்ததும் சொல்வான், “கதிரேசப்பூ, நீ ஒவ்வொரு நாளும் கடைக்கு வரவேண்டும். என்னை, இந்தக் கிராமத்தில் இருப்பவர்கள் யாருக்கும் பிடிப்பதில்லை. ஏனென்றால் நான் உண்மையை உள்ளபடி நேருக்கு நேர் ஒவ்வொருவருக்கும் சொல்லிவிடுவேன். வள்ளுவர் என்ன சொன்னாரோ அதன்படி தான் நான் நடக்கிறேன், “ஒருவன் அறநெறிகளைப் போற்றி வாழாதவனாகவும், அறச்செயல்களைச் செய்யாதவனாக இருந்தாலும் புறங்கூறாதவனாக வாழ்தல் வேண்டும். ஒருவனுக்கு முன்னால் நின்று இரக்கமற்ற சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம், ஆனால் அவன் இல்லாதபோது எதையும் பேசலாகாது” என்று தானே வள்ளுவர் சொன்னவர். கோயிலை நிர்வகிக்க என்று ஒரு சபை இருக்கு.

தினமும் ஒவ்வொருவரிடமும் சென்று பணம் வசூலிக்கிறார்கள். வெளி நாடுகளில் இருந்து பலர் பணம் அனுப்புகிறார்கள். எப்போதாவது அதற்குக் கணக்குக் காட்டியிருக்கிறார்களா?... புண்ணியம் செய்வதற்கு விதிமுறைகள் இருக்கு. நோயாளி, அனாதை, உழைக்கமுடியாதவன், உழைத்தும் விதிவசத்தால் தன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாதவன், அங்கவீனன் இவர்களுக்குத் தான் உதவி செய்ய வேண்டும். கோயிலில் அன்னதானம் செய்யும் போது வசதியானவர்கள் பலர் முண்டியடித்து உணவைப் பெறுகின்றனர். நோயாளியால், அங்கவீனனால் உணவைப்பெற முடிவதில்லை. இவற்றைச் சொன்னால் பலருக்குக் கோபம் வருகிறது. இதனால் தான் நான் பலருடன் முரண்படுகிறேன். உனக்கு எப்போதும் எனது மனதில் இடம் உள்ளது. உனது மூத்த மகன் வாய் பேச மாட்டான். அவனை இங்கு அனுப்பு, அவன் கடைவேலைகளைச் செய்து பழகட்டும் . அதற்கும் நான் சம்பளம் தருவேன்'' என்றான் வேலாயுதம்,

''பாத்திரம் அறிந்து பிச்சை இடு'' என்றார் ஒளவையார்.

''கர்மத்தைச் செய் பலனை எதிர்பார்க்காதே'' என்கிறது பகவத்கீதை.

கர்மத்தைத் தர்மப்படி செய்தால் பலன் வந்து சேரும்.

''நான் பொங்கல் வைக்கிறேன், அபிஷேகம் செய்கிறேன், காவடி எடுக்கிறேன், நீ என்னை வெளிநாட்டிற்கு அனுப்பு, என்னுடைய பிள்ளைகளுக்கு வேலை கொடு, எனக்கு அதிஸ்டலாபச் சீட்டில் ஒரு கோடி ரூபா பணம் விழச்செய்'' இப்படி நேர்த்திகளைச் சிலர் வைக்கிறார்கள்.

சிலர், “நான் வெளிநாட்டுக்குப் போனால் உனக்குத் தங்கச் சங்கிலிபோடுவேன். ஆயிரம் மோதகங்கள் அவித்துப் படைப்பேன்” என்றெல்லாம் நேர்த்தி வைக்கிறார்கள்.

நேர்த்தி வைப்பவர்களின் எண்ணங்களை எல்லாம் பூர்த்தி செய்யும் வல்லமையுள்ள கடவுளுக்கு, நேர்த்தி வைப்பவர்கள் கூறியவற்றைச் செய்ய முடியாதா?

இவற்றைப் பாமரமக்களால் தான் சிந்திக்க முடியவில்லை என்று சொல்லலாம். கற்று மேலதிகாரிகளாக வந்தவர்களுக்குமா இவை புரியவில்லை.

கற்றவனுக்கு நீதி, நியாயம், தர்மம் என்பனவெல்லாம் என்னவென்று தெரியும். இருந்தபோதும் கற்றவர்களில் பலர் கற்றபடி நடப்பதில்லை.

இதை வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

கற்பதற்கேற்ப நூல்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்ற பின் அதன்படி வாழ வேண்டும்.

நீதி என்பது தெய்வம்.

அதைக் கடைப்பிடிக்காதவரை அது தண்டிக்கும்.

மிகவும் உயர்ந்த மேலதிகாரி ஒருவர் இருந்தார். அவர் தனக்கும், தனது நண்பர்கள், இனத்தவர்களுக்கும் பிடிக்காதவர்களை இடம்மாற்றி விடுவார்.

யாராவது அது பற்றிக்கதைக்கச் சென்றால், “உம்மைத் தண்ணீர் இல்லாத காட்டிற்கு இடம்மாற்றும் அதிகாரம் எனக்குண்டு. உம்மை மாற்றிய இடம் தூரமானாலும் நல்ல

இடம். மறுபேச்சின்றிச் செல்லும். இல்லாவிட்டால் வேலையை விடும்” என்பார்.

அவருக்கு இடமாற்றம் அமைச்சரால் செய்யப்பட்டது. தனது இடமாற்றத்தை ரத்துச் செய்யும்படி அமைச்சரைக் கேட்டார். அமைச்சர் அவர் சொன்னதைப் போல அவருக்குச் சொன்னார்.

நீதி யமதர்மராசாவைப் போன்றது. யம தர்மராசா குறித்த வேளையில் குறித்த உயிரை எடுப்பது போல அறமும் குறித்த வேளையில் தண்டிக்கும் வலிமை பெற்றது.

தர்மத்தில் இருந்து வழுவினால் பெரும் இன்பத்தைப் பெறலாம். ஆனால் தர்மம் தண்டித்தால் தர்மம் தவறுபவன் மட்டுமல்ல அவனது வம்சமும் தண்டிக்கப்படும்.

இது எழுதாத சட்டம்.

சமூகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய நீதி.

ஒரு காலத்தில் “ஓஹோ” என்று வாழ்ந்தவன் பின் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் பிச்சை எடுக்கிறான்..

பிச்சை எடுத்தவன் கோடீஸ்வரனாக மாறுகிறான். இது ஏன்?

இது தான் தர்மத்தின் வெளிப்பாடு.

நீதியின் வெகுமதி

அறத்தின் தண்டனை

ஒருவன் சமூகத்தைப் பார்த்து நீதி நியாயங்களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

தர்மத்தைக் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

இந்துக்களின் அறநூல் வேதம்.

வேதம், அறக்கடவுளின் கண்களாகச் சூரியனும், சந்திரனும் இருப்பதாகக் கூறுகிறது.

பகலில் நடைபெறும் நன்மை தீமைகளைச் சூரியன் அறிந்துகொள்வான்.

இரவில் நடைபெறும் நன்மை தீமைகளைச் சந்திரன் அறிந்து கொள்வான்

அவன் உதிக்காத காலங்களில் ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள் அவற்றை அறிந்து சந்திர சூரியனுக்குச் சொல்லும்

சூரியனும் சந்திரனும் இல்லாமற் போவதில்லை. அவர்கள் கண்களுக்குத் தெரியாது மறைந்திருந்து நன்மை தீமைகளை அறிந்து கொள்வார்கள் என்கிறது இந்து தர்மம்.

உடலில் மறைந்திருக்கும் நோய்களை நேரிற்காணாமலே அதன் தாக்கத்தை தெரிந்து தீர்த்து வைக்கிறார் வைத்தியர்.

வைத்திய நாதரான சிவன் மற்றவர்களுக்குத் தெரியாது என்று நினைத்துச் செய்பவற்றையெல்லாம் அறிந்து கொள்வார் ஏனென்றால் உலகில் உள்ள பொருட்கள் யாவற்றிலும் அவர் அந்தர்ஜாமியாக இருக்கிறார்..

கண்களாற்காணாத உயிர் இருக்கிறது என்று நம்புபவர்கள், கண்களாற்காணாத கடவுளும் இருக்கிறார் என்று நம்பத் தான் வேண்டும்

உனது கடமைளை நீ செய், மற்றவர்களைக் கர்மமாற்றவிடு.

அவர்கள் கேட்டாலன்றி உதவி செய்யாதே, ஆலோசனைகள் கூறாதே.

விதி வசத்தால் நீ கூறும் ஆலோசனைகள் கேட்பவனுக்குப் பெரும் தீங்கினையும் உண்டாக்கலாம்.

நீ செய்யும் உதவிகள் சிலசமயம் அவனுக்கு உபத்திரமாகவும் இருக்கலாம்.

அதனால் உதவி செய்யும் போதும், ஆலோசனைகள் வழங்கும் போது மிகுந்த அவதானத்துடன் செயலாற்ற வேண்டும்.

எனது நண்பர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர் ஒழுக்க சீலர். அவரது இனத்தவர் ஒருவனின் மகள் வயது சென்றும் திருமணமாகாது இருந்தாள். அதனால் அவர் தனது இனத்தவரின் மகளுக்குத்திருமண ஏற்பாடுகளைச் செய்ய விரும்பினார். அவருக்குத் தெரிந்த ஒரு நல்ல பையனை அப் பெண்ணுக்குத் திருமணம் பேசி முடித்து வைத்தார்.

ஐந்து வருடங்கள் கழிந்தன. அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. பெண்ணின் தந்தை அடிக்கடி எனது நண்பரின் வீட்டுக்குச் சென்று, எனது நண்பரிடம் தனது மகளுக்குப் பிள்ளையில்லாதது பற்றிக் கூறுவார். ‘‘மாப்பிள்ளையின் இரண்டு சகோதரர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் எனது மகளுக்கும் பிள்ளையில்லாது போய்விடும்’’ என்று மனம் புண்படும் படியாகச் சொல்வார்.

ஒரு நாள் என்னைச் சந்தித்துத் தனது மகளுக்குப் பிள்ளைகள் இல்லாததைப் பற்றிக் குறைப்பட்டார், ‘‘நீங்கள் கடவுளை நம்புபவரா?’’ என்று நான் அவரைக் கேட்டேன்.

அவர் ‘‘ஆம்’’ என்றார்.

‘‘ஐயா, கடவுளின் கிருபை இல்லாமல் எதுவும் நடைபெறாது. இன்ன செயல் இன்னநாள் தான் நடக்கும் என்று கடவுளின் தீர்மானம் இருக்கு. உங்கள் மகளுக்கு வயது வந்தும் திருமணமாகவில்லை. அதன் காரணமாக எனது நண்பர்

மிகவும் துயரமடைந்த உங்களுக்கு உதவி செய்தார். மாப்பிள்ளை நல்ல குணவான். நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். அதைவிடத் திருமணமாகுமுன் பொருத்தம் பார்த்துத்தானே செய்தீர்கள். தினப் பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப் பொருத்தம், ராசிப் பொருத்தம், ரஜ்ஜி பொருத்தம் ஆகியன பொருந்தித்தானே இருந்தது. நாவலர் ஸ்ரீவித்தியா மஹாகணபதி ஆலயக் குருக்கள் அச்சொட்டாகக் கணிப்பார். அவர் செய்யச் சொன்ன திருமணங்கள் எவையும் பிழைத்ததில்லை. உமது மகளுக்கு நாற்பது வயதிற்கு மேலாகிவிட்டது. எனவே மஹாகணபதிக்கு ஒரு நேர்த்தி வையுங்கள். அத்துடன் குருக்களிடம் குறிப்பைக் காட்டுங்கள். மருத்துவரின் உதவியை நாடுவதும் நல்லது'' என்றேன்.

''என்ரை பிள்ளையில் குறை இருக்க மாட்டாது. நீங்கள் உங்களது நண்பருக்காகத்தான் கதைப்பீர்கள்'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

சில நாட்கள் சென்றன. அன்று வெள்ளிக் கிழமை. இரவுப் பூசை முடிந்ததும் குருக்கள் என்னிடம் வந்து சொன்னார், ''உமது நண்பர் கவலைப்படுகிறார். தான் திருமணம் செய்து வைத்தவருக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடைக்காததால் அவர்கள் தன்னைக் குறைகூறுவதாகச் சொல்லி, அவர்களது சாதகத்தைப் பார்க்கச் சொன்னார். நான் முன்பே சொன்னனான், ''பிள்ளைக்கு நாகதோஷம் இருக்கு. வெள்ளிக்கிழமைகளில் விரதமிருந்து துர்க்கையைப்பூஜிக்கச் சொல்லி'' அவர்கள்

கேட்கவில்லை. இப் போதும் அதைத்தான் சொல்லியுள்ளேன்.'' என்றார்.

ஒரு மாதம் கழிந்தது. நண்பர் திருமணம் செய்து கொடுத்த பெண் எனது நண்பரின் வீடுதேடிச் சென்று சொன்னாள், ''மாமா, அப்பா உங்களைக் குறைகூறுவதை அறிந்து மிகவும் துக்கப்பட்டேன். அதற்காக அவருக்குத் தெரியாமல் நானும் அம்மாவும் அவர் வேலைக்குச் சென்ற பின்பு மகப்பேற்று வைத்திய நிபுணரிடம் சென்றோம். அவர் என்னைப் பரிசோதனை செய்து விட்டு, எனது கர்ப்பப்பையில் சில குறைகள் இருப்பதாகக் கூறி, அதற்கான மருந்து வகைகளைத் தந்தார். பிரச்சினை இல்லை. விரைவில் உமக்குக் குழந்தை கிடைக்கும் என்றும் சொன்னார். இப்போது நான் கர்ப்பமுற்றுள்ளேன்''.

எனது நண்பன் மகிழ்வுடன் மூச்சு விட்டார்.

நீதி நியாயத்தைச் சிலர் பார்ப்பதில்லை அடுத்தவர்களின் மனதைப் புண்படுத்தக்கூடாது என்றும் நினைப்பதில்லை.

உதவி செய்ய வேண்டும், உதவி செய்யும் போது இவருக்குச் செய்யலாமா செய்யக்கூடாதா என்று எப்படித் தீர்மானிப்பது.

நட்புடன் பழகுபவர்கள் நண்பர்களுக்கு உதவி செய்வது இயற்கை. அந்த உதவி சில சமயம் துன்பத்தைக் கொடுத்தால், அது உதவி செய்தவரின் செயலால் வந்ததல்ல. உதவி பெற்றவரின் கன்மவினையால் வந்ததென்று நினைப்பவன் தான் மனிதன். அவன் நேர்மையாக வாழ்பவன். தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன்.

துன்பங்களை இன்பங்களாக மாற்றலாம், அப்படி மாற்றுபவன் தான் கடவுள் பக்தியுள்ள மனிதன்.

“உன்னுடைய கடமை கா்மம் செய்வது மட்டும் தான். அதை ஈஸ்வர அா்ப்பணமாகச் செய், நன்மையும், தீமையும் அவரவா் கன்மவினைக்கேற்பத் தான் உண்டாகும்” என்கிறது கீதை.

ஒரு பெரியவா், ஒருவருக்குப் பத்தாயிரம் ரூபா கொடுத்து, “இதிலிருந்து நீ முன்னேறு” என்றாா். அது போலத் தனது மனைவியின் சகோதரனுக்கு ஓா் இலட்சரூபா கொடுத்து, “தொழில் செய்து முன்னேறு” என்றாா்.

இரண்டு வருடங்களின் பின் பத்தாயிரம் ரூபா பெற்றவன் மோட்டாா் வண்டியில் வந்து அவரை வணங்கித் தான் பத்து இலட்ச ரூபாவுக்கு அதிபதியாக இருப்பதாகவும், இன்னும் இரண்டு வருடங்களில் கோடீஸ்வரனாகி விடுவேன் என்றும் சொன்னான்.

உதவி செய்தவா் மனம் மகிழ்ந்தாா். மனைவியின் சகோதரனுக்கு அவரின் மனைவியின் வேண்டுதலுக்கு அமைய மீண்டும் இரண்டு இலட்ச ரூபா கொடுத்தாா். அவன் மூன்று இலட்சம் ரூபாவையும் அழித்து விட்டான்.

செய்யும் தொழிலில் அக்கறை, முயற்சி, அவதானம் உள்ளவன் முன்னேறுவான்.

ஒழுக்க மானவாழ்வு, கடவுள் பக்தி, முயற்சி என்பன இருந்தால் விதி தீயது செய்தாலும் கடவுள் இரக்கப்படுவாா். அதனால் இலாபம் உண்டாகாமல் விட்டாலும் நட்டமாவது இல்லாமல் இருக்கும்.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஊழ்வினை காரணமாகக் தெய்வத்தின் துணை இல்லாது இருந்தாலும், ஒருவன் முயற்சியால் தனது உடம்பை வருத்திய வருத்தத்தின் கூலியாவது கிடைக்கும்.

நீதி, நியாயம், தர்மம் இவற்றிற்கு அமைவாக நீ செயற்பட வேண்டும். அப்படிச் செயற்படும் போது தீயவர்களுக்கும் உதவிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.. ஒவ்வொருவரும் செய்யும் நன்மைகள் ஏதோ ஒரு வடிவில் செய்பவருக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ திரும்பி வட்டியோடு வரும். அது போலத் தீமை செய்பவர்களுக்கான பலன் வட்டியோடு திருப்பித் தீமை செய்பவனுக்கு அல்லது அவனது குடும்பத்தினருக்கு வந்து துன்பத்தைக் கொடுக்கும். இது அறத்தின் செயல்.

தீயவர்கள் ஒரு போதும் நீதி, நியாயம், தர்மம் என்பவற்றைப் பார்க்க மாட்டார்கள். இதை இதிகாச புராணங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

துரியோதனன் எப்போதாவது நல்லதைச் சிந்தித்தானா?

இராவணன் நீதியை, நியாயத்தை, தர்மத்தைக் கடைப்பிடித்திருந்தால் இன்னொருவனின் மனைவியைக்கடத்தி வந்திருப்பானா…?

நல்வர்கள் எப்போதும் தமக்குத் தீமை செய்பவர்களுக்கும் தீமை செய்யமாட்டார்கள்.

இராமன், தீயவனான இராவணன் போர்க்களத்தில் நிராயுதபாணியாக்கப்பட்ட பின்பும் அவனைக் கொல்லாது “இன்றுபோய் நாளை ஆயுதங்களுடன் வா” என்றான்.

பாரதப்போரிற்கு நாள் குறிக்கத் துரியோதனன் சகாதேவனிடம் சென்ற போது அவன் மிகவும் நல்ல நேரத்தைக் குறித்துக் கொடுத்தான். அந்த நேரத்தில் போர் ஆரம்பமானால் கௌரவர்கள் வென்றுவிடுவார்களென்று முடிவு கட்டிய கிருஷ்ணன் பல சூழ்ச்சிகள் செய்து போரைக் குறித்த நேரத்தில் தொடங்காமல் செய்தான்.

மனுநீதி கண்ட சோழமன்னன் தனது மகனின் தேர் பசுக்கன்றை நெரித்துக் கொன்றமையைக் குற்றமாகக் கருதித் தனது மகனைத் தேர்ச்சில்லால் நெரித்துக் கொல்லச் சொன்னனாான்.

நமது முன்னோர் நீதிக்காகத் தமது உயிர்களை விட்டமையை நாம் பழந்தமிழ் நூல்களில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

நான் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் எத்தனையோ தடைகள்வந்தன.

நான் பாடசாலையை முன்னேற்றுவதற்காக எடுத்த நடவடிக்கைகள் பிழையானவை என்றனர்.

பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் வாங்கியபோது அதை வாங்கவிடாது தடுத்தனர்.

பாடசாலைக்கெனக் காணி இருந்த போதும் அதற்குள் கட்டிடத்தைக் கட்டாது விளையாட்டு மைதானத்தில் கட்டிடம் கட்டத் தீர்மானித்தனர்.

நீதிக்குத் துன்பங்கள் வரும். சோதனை வரும் ஆனால் பிழைக்காது.

பலன் கிடைக்கச் சிலசமயம் தாமதம் உண்டாகலாம். சில சமயம் சில வருடங்களுக்குப் பின்பும் கிடைக்கலாம்.

ஆனால் பலன் கிடைக்கவில்லை என்று யாரும் தனது சுதர்மத்தைக் கைவிடக்கூடாது. தொடர்ந்து கர்மத்தைச் செய்து கொண்டே இருக்கவேண்டும்.

நினைத்த எல்லாவற்றையும் நான் செய்தேன். அவை யாவும் வெற்றியளிக்காமல் விடவில்லை.

அதுபோலச் செய்தவற்றை எல்லாம் எழுதிவருகிறேன். எழுதாது விட்டால் அது மற்றவர்களுக்குப் பாடமாக, அனுபவமாக இருக்காது.

எனக்கும் பாடசாலைக்கும் பலர் உதவி செய்துள்ளனர். அவர்கள் செய்தவற்றை எழுதாவிட்டால் பிற்காலத்தில் அவற்றைச் செய்தவர்கள் யார் என்று தெரியாமல் போய்விடும்.

எனது பேரனார் எதையும் குறித்துவைப்பதில்லை. அதனால் எனது தந்தை பிறந்த திகதியே எமக்குத் தெரியாது. எனது பேர்த்தியார் கூறுவார். ‘‘மணியக்காரனின் மூத்த மகன் பிறந்த மூன்றாம் நாள் தான் எனது மூத்த மகன் பிறந்தவன்’’ என்று, அதனால் மணியக்காரனின் மூத்த மகன் பிறந்த நாளை அறிந்தே எனது தந்தையின் பிறப்புப் பதியப்பட்டது.

நான் கடமையாற்றிய பாடசாலையில் கடமையாற்றிய பல அதிபர்கள், ஆசிரியர்களின் விபரங்கள் பதியப்படாமையால் அவர்களது சேவைகளைப் பற்றி அறிய முடியவில்லை.

நான் எழுதியவை பிழை என்று பெரியவர்கள் சிலர் கண்டுபிடித்துள்ளனர்.

நான் செய்த சேவைகளையே எழுதியுள்ளேன். அது பிற்காலச் சந்ததிக்குத் தேவை.

விவேகானந்தர், இராமகிருஷ்ணர் பரமஹம்சர், பாரதியார் முதலியோர் செய்தவை யாவும் அவர்களாலேயே எழுதப்பட்டது.

மகாத்மாகாந்தி தனது சுயசரிதையை எழுதியுள்ளார்.

இவை எவையும் எனது சுதர்மத்தைத் தடுத்ததில்லை.

மனிதன் சுதர்மத்திலிருந்து வழுவக்கூடாது.

துன்பங்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்தவை. அதை விலக்கிவிட்டு வாழமுடியாது என்று நினைப்பவன் நீதியோடும் நியாயத்தோடும் வாழ்வான்.

வாழ்வு மரணத்துடன் முடிந்து விடுவதில்லை. மரணம் பிறப்பின் ஆரம்பம் என்று உணர்ந்து கொள்பவர்கள் நீதியுடனும், நியாயத்துடனும் தர்மம் செய்து வாழ வேண்டும் என்று முடிவு செய்து வாழ்வார்கள்.

மற்றவர்கள் உனக்குத் துன்பம் செய்கிறார்கள் என்பதற்காக நீ நீதியில்லாத செயல்களை அவர்களுக்குச் செய்யலாகாது.

மனைவி நீ நினைத்தவாறு எவ்வேளையிலும் நடந்து கொள்ள முடியாது.

தாய் எவ்வேளையிலும் உனக்கு உதவியாக இருக்க முடியாது.

பிள்ளைகள் எவ்வேளையிலும் உனது சொற்களைக் கேட்பார்களென்று நினைக்கக் கூடாது.

நண்பர்கள் எப்போதும் துரோகம் செய்ய மாட்டார்கள் என்பதற்கில்லை.

எனவே வாழ்க்கையில் தவறுகள், பிரச்சினைகள் எப்போதும் வரும். அவற்றை மன உறுதியுடன் எதிர் கொள்வது தான் மனிதனது கடமை.

விபச்சாரியான ஒரு பெண் நல்ல கணவனை அடைந்து விட்டால் அவள் அன்றே திருந்துதுல் வேண்டும். அதுதான் தர்மம்.

திருடன் ஒருவன் அகப்பட்டுத் தண்டனை பெற்றுவிட்டால் அதன் பின் அவன் திருடக்கூடாது. அது தான் நேர்மை.

அத்திருடன் இனித்திருடமாட்டான் என்று நல்லவர் ஒருவர் பிணை நிற்கிறார். அவரது நம்பிக்கை வீணாகாது நடந்து கொள்வது நேர்மை, அதை நீதியென்றும் சொல்லலாம்.

ஒவ்வொருவருக்கும் அவரவர் குடிக்குரிய தர்மம் உள்ளது. அதை அவர்கள் போற்றினால் போதும்.

ஆசை வசப்பட்ட மனிதர்களுக்கு, அது நிறைவேறாத போது அது கோபமாக மாறுகிறது. அது நீதிநியாயங்களைப் பாராது பாவம் செய்யத் தூண்டுகிறது. அதனால் ஆசையை ஒழித்தால் துன்பங்கள் இல்லை. அதனால் நீதியும் நியாயமும் தர்மமும் போற்றப்படும்

தர்மம் என்று சொன்னதும் பலர், பொன்னைக் கொடுத்தல், பொருளைக் கொடுத்தல், உணவுப் பொருட்களைக் கொடுத்தல், உடுபிடைவைகளைக் கொடுத்தல், பணத்தைக் கொடுத்தல் என்று தான் நினைக்கிறார்கள்.

ஔவையார் “அறம் செய்ய விரும்பு” என்று கூறியுள்ளாரே தவிர எதையாவது கொடு என்று கூறவில்லை.

“அறம் செய்ய விரும்பு” என்றால் “தான தருமம் செய்ய ஆசைப்படு” என்று தான் ஆறுமுக நாவலர் கருத்துக்கூறியுள்ளார்.

நல்லவற்றறைச் செய்ய விரும்புபவன் தான் செய்வான். விரும்பாதவன் செய்ய மாட்டான்

மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிட முகமகிழ்ச்சியோடு இனிமையாகப் பேசுவதே நன்று.

முகத்தால் விரும்பி, கனிவுடன் நோக்கி, உள்ளம் அறிந்து இன்சொல் பேசுவதே அறமாகும்.

இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

மகிழ்வுடனும் இனியசொல் பேசியும் வாழ்பவனுக்கு எந்த நோய்களும் வராது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். மகிழ்வான மனம்உடலைச் சமச்சீராக இயங்க வைக்கும். உடலின் உறுப்புக்கள் யாவும் உரிய முறையில் இயங்கும். துயரப்படுவதால் மூளையின் இயக்கம் குறையும், அதனால் இரத்த ஓட்டம் குறையும். உறுப்புக்களுக்குச் சரியாக இரத்தம் செல்லாவிட்டால் உறுப்புக்கள் விறைத்துச் செயலிழக்கும். இருதயநோய்கள், மனநோய்கள், உண்டாகும் இதனால் தான் தானம் செய்யாவிட்டாலும் மகிழ்வுடன் பேசி மகிழ்ந்திரு என்று இந்து தர்மம் கூறுகிறது.

ஒருவருடன் பேசி மகிழ்வது தர்மம்,

துயரப்பட்டவனுக்கு ஆறதல் கூறுவது தர்மம்.

நோயாளிக்கு ஆறுதல் கூறி அவனது மனதைத் தைரியப்படுத்துவது தர்மம்.

பலர் கடுமையான நோயாளிகளைப் பயப்படச் செய்வார்கள். காலில் ஒரு புண் பல நாட்களாக மாறாமல் இருந்த ஒருவருக்கு அயல்வீட்டுக்காரன் அது, “புற்று நோயாக இருக்கலாம்” என்று கூறிவிட்டான். நோயாளியும் அவரது குடும்பத்தினரும் செய்வதறியாது திகைத்துப் போனார்கள். ஊரில் கதை பரவி விட்டது. பலர் அவரை அனுதாபத்துடன் பார்த்தார்கள். சிலர் ஆலோசனைகள் சொன்னார்கள். கடன்காரர்அவரது பெற்றோருக்கு அவர் தரவேண்டியவற்றைச் சொன்னார்கள்.

அந்த ஊரில் உள்ள ஒரு பெரியவர் அவனை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று பரிசோதனை செய்வித்தார். வைத்தியர்கள் அவருக்கு எந்தவித நோயும் இல்லை என்றும் அவர் அந்தப் புண்ணைக்கவனிக்காது விட்டு விட்டார் என்றும் சொல்லி வைத்தியம் செய்தனர். அந்தப்புண் இரண்டு மூன்று தினங்களில் மாறிவிட்டது.

“தவறான ஆலோசனைகள் சொல்பவனுக்குப் பாவம் உண்டாகும். நல்ல ஆலோசனைகள் சொல்பவனுக்குப் புண்ணியம் உண்டாகும்.

உண்மையாக வருத்தம்இருந்தாலும் சம்பந்தப்பட்டவரைப் பயமுறுத்தாது அன்பாக, ஆதரவாகப் பேசி வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமே தவிரத் தேவையில்லாத கதைகளைப் பேசக்கூடாது.

“ஒரு சம்பவத்தை கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீரவிசாரித்து அறிவதே மெய் என்று இந்து தா்மம் கூறுகிறது. அதனால் தான் வள்ளுவா் அறிவைப்பற்றி இவ்வாறு சொன்னார்.

எப்பொருளை யார்யாரிடம் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதே அறிவாகும்.

ஒரு செய்தியை யார் மூலமாகத் தெரிந்து கொண்டாலும் அதைப்பற்றி ஆராய வேண்டுமே தவிர உடனேயே முடிவெடுத்தலாகாது. அப்படியான திடீர் முடிவுகளால் நன்மையான பல காரியங்கள் நடவாமல் போயுள்ளன.

ஒரு திருமணத்தைக் குழப்புவது பாவம். பெண்பழி பொல்லாதது என்பார்கள். தற்செயலாக ஒரு பெண்

கெட்டுவிட்டால் அதைப் பெரியவர்கள் மறைத்து விடுவார்கள். சிலர் அப் பெண்ணுக்குத் திருமணம் பேசும்போது அதைச் சொல்லிக் குழப்புவார்கள்.

இதைவிடப் பகையாளியின் பெண்ணின் திருமணத்தை இல்லாத பொல்லாத காரணங்கள் கூறிக்குழப்புவோர் பலர் இருக்கிறார்கள். இது தீராத பாவம். சொல்பவனையும், அவனது குடியையும் அழிக்கும் தன்மையான பாவம்.

தர்மம் என்று சொல்லும்போது உடலால் செய்யும் தானதர்மங்கள் பல உண்டு. அது போல மனதால் செய்யும் தர்மங்களும் பலவுண்டு. வார்த்தைகளால் செய்யும் தர்மங்களும் பல உண்டு,

பொய்பேசாது வாழ்வது தர்மம்

அடுத்தவன் மீது பொறாமைப்படாது வாழ்வது தர்மம்

எல்லா உயிர்கள் மீதும் அன்பு பூண்டிருப்பது தர்மம்

இல்லாளைக் கொடுமைப்படுத்தாதிருப்பது தர்மம்

பெற்றோர், அயலவர், சுற்றத்தவர் ஆகியோர்க்கு உதவி செய்வது தர்மம்.

பிறன் இல் விழையாமை தர்மம்

ஒரு பெண் தனது கணவனுக்குத் துரோகமிழையாமை தர்மம்

நம்பியவரை ஏமாற்றாது இருப்பது தர்மம். இப்பொழுது நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் இல்லை என்று எனது நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்வார்.

அவர் பல காலமாக அளவுக்கதிகமாக நம்பியிருந்த ஒருவர் அவரை ஏமாற்றிவிட்டார். நம்பியவர்கள் ஏமாற்றும் போது உயிரே போய் விடும். அந்தத் துன்பத்தை அனுபவித்தவர்களுக்குத்தான் அது பற்றித் தெரியும். ஏனெனில் நானும் ஒருவரால்

மிகவும் மோசமாக ஏமாற்றப்பட்டேன். அதனால் அவர் அப்படிக் கூறும் வேளைகளில் நான் பதில் கூறுவதில்லை.

நடுவுநிலைமை தவறாது வாழ்வது தர்மம்.
அடக்கமாக வாழ்வது தர்மம்.
ஒழுக்கமுடையவர்களாக வாழ்வது தர்மம்.
பொறுமை உடையவராக வாழ்வது தர்மம்.
மற்றவர்களைப் பற்றிப் புறம் கூறாமல் வாழ்வது தர்மம்.
பலனில்லாத சொற்களைப் பேசாது வாழ்வது தர்மம்.
தீவினைகளுக்கு அஞ்சிவாழ்வது தர்மம்.
புகழ் உண்டாக்கும் படியாக வாழ்வது தர்மம்.
புலால் உண்ணாமல் வாழ்வது தர்மம்.
களவெடுக்காமல் வாழ்வது தர்மம்.
கள்ளருந்தாமல் வாழ்வது தர்மம்.
பொய் சொல்லாமல் வாழ்வது தர்மம்.
சினம் கொள்ளாமல் வாழ்வது தர்மம்.
மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாது வாழ்வது தர்மம்.
உயிர்களைக் கொல்லாமல் வாழ்வது தர்மம்.

இவ்வாறு இந்து தர்மம், தர்மம் செய்து வாழ்வதைப் பற்றிக் கூறியுள்ளது.

பொருளைக் கொண்டு தர்மம் செய்ய முடியாதவர்கள் பாவிகளாகக் கூடாது. அவர்களும் முத்தியடைய வேண்டும். இப்பிறப்பில் இல்லா விட்டாலும் அடுத்த பிறப்பிலாவது அவர்கள் பொருளுள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்காகத் தான் இந்துமதம் மனதால் தர்மம் செய்யும்படி கூறியுள்ளது.

பொருளின் அளவு தர்மத்தின் அளவைக் கூட்டாது. பலர் புகழுக்காகவும் பெருமைக்காகவும் தர்மம் செய்கின்றனர்.

தர்மத்தைப் பற்றி நான் முன்பும் எழுதியுள்ளேன். அதில் தருமர் செய்த யாகசாலையில் புரண்டும் தனது மேனியின் ஒரு பகுதி பொன்னிறமாகவில்லை என்று கூறிய கீரிப்பிள்ளையின் கதை உங்களுக்குத் தெரியும்.

விநாயக புராணத்தில் ஒரு கதை உண்டு.

ஜனகராஜன் என்ற மன்னனின் அரண்மனைக்கு ஒரு நாள் நாரதர் வந்தார். மன்னன் தான் வேறு கடவுள் வேறு என்று நினைக்காதவன். அதனால் அவன் நாரதரை வரவேற்கவில்லை.

அவனது ஆணவத்தை அடக்க எண்ணிய நாரதர் விநாயகரிடம் சென்று அதை முறையிட்டார்.

விநாயகர் ஒரு கிழப் பிராமணவடிவம் தாங்கி ஜனகராஜனின் அரண்மனைக்குச் சென்று, “எனக்குப்பசியாக இருக்கிறது” என்று சொன்னார்.

அதைக்கேட்ட மன்னனுக்குச் சிரிப்பு வந்தது. பொன்னையும் பொருளையும் தான் மக்கள் கேட்டு வருவார்கள், “இக்கிழப்பிராமணன் உணவு கேட்டு வந்திருக்கிறான்” என்று நினைத்து ஏவலாளர்களை அழைத்து அக்கிழப்பிராமணருக்கு உணவு கொடுக்குமாறு கட்டளையிட்டான்.

சமையலறையில் ஓர் வாழையிலை போட்டு கிழப்பிராமணருக்கு உணவு படைக்கப்பட்டது.

சமையற்காரன் உணவு வகைகளை வைக்குமுன் கிழப்பிராமணர் உண்டு விட்டு, “இன்னும் வை” என்றார்.

அவர்கள் சமைக்கத் தொடங்கினர், “நீங்கள் சமைக்கும் வரை என்னால் பசியைத் தாங்க முடியாது. நான் பச்சையாவும் உண்பேன்” என்றார்.

உணவுக்களஞ்சியத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட தானியவகைகள் அனைத்தையும் உண்டு முடித்த கிழப்பிராமணர், “எனது பசி அடங்கவில்லை” என்றார். அதனால் மன்னன் நாட்டில் உள்ள உணவு வகைகளைக் கொண்டு வரும்படி கூறினான்.

மக்கள் வண்டிவண்டியாக உணவுகளைக் கொண்டு வந்தனர். அதுவும் அவருக்குப் போதவில்லை.

அதைக்கண்டு மன்னன் கலங்கினான், “பெரியவரே, இனி என்னிடம் எதுவும் இல்லை. அது போல எனது நாட்டிலும் எதுவும் இல்லை” என்றான்.

கிழப்பிராமணர் சிரித்தார், “கடவுள் வேறு நான் வேறு இல்லை என்றாய். இப்பொழுது எனது பசியைப் போக்க முடியாதவனாக இருக்கிறாய் நீ கடவுளா..?” என்று கேட்டு விட்டு வெளியேறினார் அந்தக்கிழப்பிராமணர்.

அங்கிருந்து அவர் திரிசரன் என்ற ஓர் ஏழைப் பிராமணனது வீட்டுக்குச் சென்றார். அவரைக் கண்டதும் திரிசரனும் அவனது மனைவியும் பதட்டப்பட்டனர். அந்த முதியவருக்குக் கொடுக்க ஒரு மணி அரிசிகூட அங்கிருக்கவில்லை.

“திரிசரா, பசியினால் நான் ஜனகமகாராஜாவின் அரண்மனைக்குச் சென்றேன். அவர் தந்த உணவு எனது பசியை அதிகரித்து விட்டது. அதனால் உன்னிடம் வந்தேன். பசிக்கிறது எனக்கு உண்ண ஏதாவது தா” என்றார்.

“பெரியவரே, அரசனால் தீர்க்கமுடியாத உமது பசியை ஏழைப்பிராமணனான என்னால் எப்படித்தீர்க்க முடியும். இன்று

யாசித்த பொருட்கள் யாவும் முடிந்து விட்டன. ஓர் அறுகம்புல் மட்டும்தான் உள்ளது'' என்றான் திரிசரன்.

``அதைத்தா'' என்று கேட்டு வாங்கிய அந்தக் கிழப்பிராமணர், அதை உண்டுவிட்டு; ``அப்பாடா, இப்போது தான் எனது பசி நீங்கியது'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

அப்பொழுது திரிசரனது வீடு மாளிகையானது. விநாயகர் அவனுக்குக் காட்சி கொடுத்தார்.

பெருமைக்காகக் கொடுப்பது தர்மம் ஆகாது. பயனை எதிர்பாராது கொடுப்பது தான் தர்மம்.

எனது பேரனார் ஒரு விவசாயி. அவர் மதியவேளையில் வயலுக்குச் சென்று அங்கு மேயும் பசுக்களுக்கெல்லாம் தண்ணீர் வைப்பார். இது மேலான தர்மம்.

வாடியிருக்கும் மரங்களுக்கு நீர் ஊற்றுவதும் தர்மம். இப்படித் தர்மம் செய்வதற்கு ஆயிரமாயிரம் வழிகள் உள்ளன. அவற்றை அறியாது மக்கள் தடுமாறுவதை இன்றும் நாம் காண்கிறோம்.

போர்க்களத்தில் குற்றுயிராகக் கிடந்து துடிதுடித்த கர்னனிடம் கிருஷ்ணர் கிழப்பிராமண வடிவத்தில் சென்று யாசிக்கிறார்.

அப்பொழுது கர்னனிடம் பொருள் எதுவும் இல்லை. அதனால் அவன் தனது காலத்தில் செய்த புண்ணியங்களைக் கொடுக்கிறான்.

ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்தாலே போதும். அதுவே பெரும் தர்மம்.

இன்று ஆசிரியர்களில் பலர் கற்பிப்பதில்லை.

வைத்தியர்கள் பணத்திற்காகச் சிகிச்சை செய்கின்றனர்.

வியாபாரிகள் கலப்படம் செய்கின்றனர். அதனால் வரும் பணத்தைக் கொண்டு தர்மம் செய்கின்றனர். அந்தத் தர்மப் பலன் அந்தக் கலப்படப் பொருளை வாங்கியவருக்குத்தான் செல்லும். கலப்படம் செய்தவனுக்குப் பாவம் தான் சேரும்.

எனவே தர்மத்தை யார் வேண்டுமானாலும் செய்யலாம் எப்படியும் செய்யலாம்.

பெரும்பாலான இந்துக்கள் கடவுளுக்குப் படைக்கப்பட்ட நிவேதனத்தைத் தான் தானமாகக் கொடுக்க வேண்டும் என நினைக்கிறார்கள். அதுதவறு.

திருமந்திரம், ''அறஞ் செய்யான் திறம்'' என்று கூறிப் பின்வரும் பாடல் கூறுகிறது.

''ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன் மின்
வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே''

சாதிபேதம், இளமை, மூப்பு, செல்வம், செல்வாக்கு என்பன பாராது எல்லோருக்கும் தானம் செய்யுங்கள். விருந்தினர்கள் வருவார்கள் என்று காத்திருங்கள். பழைய, அழுகிய, துர்நாற்றம் வீசும் பொருட்களைக் கொடுக்காதீர்கள். ஆறஅமர இருந்து உண்ணுங்கள். காக்கையைப் போல பகிர்ந்து உண்ணுங்கள்.

'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே''

இவ்வாறு திருமந்திரம் கூறுகிறது. பகவத்கீதையில் மஹாவிஷ்ணு, ‘‘அன்போடு என்னை நினைத்து, இலை, பூ, பழம், தண்ணீர், என்பவற்றைப் படையுங்கள் அவற்றை நான் விருப்புடன் ஏற்பேன்’’ என்கிறார்.

விநாயகர் அனலாசுரனை விழுங்கிபோது உஷ்ணம் தாங்கமுடியாது அவதிப்பட்டார். அதனால் முனிவர்களும் தேவர்களும் நீர், இளநீர், பால், நெய், தயிர், தேன், மலர், போன்றவற்றால் அபிஷேகம் செய்தும் அவரின் உடலில் இருந்த வெப்பம் குறையவில்லை. பின் அறுகம்புல்லை விநாயகரின் மேல் இட்டனர். உடனே அவரது உடலை வருத்திய வெப்பம் நீங்கியது.

விநாயக புராணத்தை எழுதிய சூதமுனிவர், விநாயகருக்கு அறுகம்புல்லால் அர்ச்சிப்பதே நன்று என்றும். அது கிடைக்காதவிடத்து வன்னியிலையாலும், வில்வம் இலையாலும் அர்ச்சிக்கலாம் என்று கூறியுள்ளார்.

குசேலர் கண்ணனுக்கு புல்விதைகளால் செய்யப்பட்ட அவலையே கொடுத்தார். அதை மிகவும் சுவையானது என்று கூறிக்கண்ணன் ஏற்றுக்கொண்டார்.

தற்பொழுது இந்துக் கடவுள்களுக்குச் செய்யப்படும் பூசைகளுக்கும், அபிசேகங்களுக்கும், திருவிழாக்களுக்கும் பெருந்தொகையாகப் பணம் தேவைப்படுகிறது. பணமுள்ளோர் பெரும் எடுப்பில் செய்வதை விட, வறியவர்கள் பொங்கும் பொங்கலைத்தான் இறைவன் மிகுந்த விருப்புடன் உண்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

‘‘மருந்தானலும் விருந்தோடு உண்’’ என்கிறது இந்து தர்மம்.

## செல்வம்

செல்வம் என்று இந்துதர்மம் பலவற்றைச் சொல்கிறது.

மக்கள் செல்வம்

சொத்துக்கள் செல்வம்

பசுக்கள் செல்வம்

நல்ல பெற்றோர் செல்வம்

நல்ல மனைவி செல்வம்

கல்வி செல்வம்

பூமி செல்வம்

இவ்வாறு அரியவற்றையெல்லாம் இந்து தர்மம் ‘செல்வம்’ என்கிறது.

ஔவையார், “நோயற்ற வாழ்வு தான் குறைவில்லாத செல்வம்” என்று கூறியுள்ளார்.

செல்வம் என்றால் நிறைவுடையது என்றும், செல்லும் தன்மை உள்ளது, அதாவது உரியவர்களை விட்டுச் சென்று விடும் தன்மையது என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

“செல்வங்களுள் ‘கல்வி’ மட்டும் பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும்” என்கிறார் வள்ளுவர்.

யாதானும் நாடாமல் ஊராமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

கற்றவர்களுக்கு எல்லா நாடுகளும் தம் நாட்டைப் போன்றவை. அப்படியிருக்க ஒருவன் சாகும் வரை கல்வி கற்காமல் இருக்கக் கூடாது.

மற்றவையெல்லாம் நிலையில்லாதவை என்று இந்து தர்மம் கூறுகிறது.

நிலையில்லாதவற்றை நிலையானது என்று மனிதர்கள் நினைப்பதால் தான் அவர்களுக்கு அழிவு உண்டாகிறது.

செல்வம் இருக்கும் போது அவற்றால் நிலைத்து நிற்கும் அறங்களைச் செய்து முடித்தல் வேண்டும் என்று இந்து தர்மம் கூறுகிறது.

அறவழியில் செல்வத்தைச் சேர்க்க வேண்டும். சேர்த்த செல்வத்தை இந்து தர்மம் கூறிய வழியில் செலவு செய்தல் வேண்டும். அப்படிச் செலவு செய்தால் செல்வம் கரையாது.

இறைக்க இறைக்க ஊறும் கிணறு போலச் செலவு செய்யச் செய்யச் செல்வம் வந்து சேரும்.

பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைப்பவர்கள் இருக்கிறார்கள்.

பண்டைக்காலத்தில் வாழ்ந்தோர் தாம் தேடிய செல்வங்களைக் கலன்களில் இட்டுப் புதைத்து வைத்தனர். பிள்ளைகளுக்குக் கூட அது பற்றிச் சொல்லவில்லை. அதனால் அது பூதம் காக்கும் புதையல் ஆயிற்று.

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக நல்வாழ்வு இல்லை. அது போல அருள் இல்லாதவர்களுக்கு மறுமையில் நல்வாழ்வு இல்லை. அதாவது பொருள் இல்லாதவர்கள் முத்தியடையமாட்டார்கள்.

பொருளை அறவழியில் தேடி, பெற்றோர், மனைவி, மக்கள், துறவிகள், ஏழைகள், ஆதரவில்லாதவர்கள், தன்குடிப்பிறந்த முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் போன்ற அனைவருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

பொருள் இல்லாவிட்டால் எவருக்கும் உதவி செய்ய முடியாது. பொருள் இல்லாவிட்டால் தெய்வத்தைக் கூடப் பேணமுடியாது.

ஒருவனை முத்தியடையச் செய்வது செல்வம்.

செல்வம் இல்லாவிட்டால் ஒருவன் தன்னைக் கூடப் பேணமுடியாது.

அவனால் யோகிகள், தவசிகள், ஞானிகள், முனிவர்கள் ஆகியோருக்கு உதவ முடியாது.

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்கத் தக்கவராகச் செய்யும் தன்மை வாய்ந்தது செல்வத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

பொருள் இல்லாது வேறு பல நன்மைகள் உள்ளவனாக இருந்தாலும் அவன் மதிக்கப்படுவது இல்லை; வேறு நன்மைகள் எதுவும் இல்லா விட்டாலும் பொருள் உள்ளவனை எல்லோரும் மதிப்பர்.

பொருள் என்று சொல்லப்படுகின்ற நல்ல விளக்கு, நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று எண்ணிய படி குறைகளைத் தீர்க்கும்.

சேர்க்கும் வழியறிந்து தீமையில்லாமல் சேர்க்கப்பட்ட பொருள். ஒருவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

அருளோடும் அன்போடும் இல்லாது தீய வழியில் தேடிய செல்வத்தை நற் செயல்களுக்குப் பயன்படுத்தாது தீயதென ஒதுக்கி விடல் வேண்டும்.

உரியவர் இல்லாத பொருளும், வரியாக வந்த பொருளும், பகைவரை வென்று திறமையாகப் பெறும் பொருளும் அரசனுடைய பொருள்கள் ஆகும்.

அன்பினால் பெற்றெடுக்கும் அருள் என்ற குழந்தை, பொருள் என்று சொல்லப்படுகின்ற செவிலித்தாயால் வளர்வதாகும்.

ஒருவன் தனது செல்வத்தை வைத்துச் செயலாற்றுவது என்பது, மலையின் மேல் ஏறி நின்று கீழே நடக்கும் யானைப் போரைப் பார்பதைப் போன்றது.

ஒருவன் பொருளைச் சேர்க்க வேண்டும். அவனுடைய பகைவரின் செருக்கை அடக்கவல்ல கூரிய ஆயுதம் பொருளன்றி வேறு இல்லை.

சிறந்ததாகிய பொருளை மிகுதியாகத் தேடியவர்களுக்கு அறமும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒன்றாகச் சேரும் எளிய பொருள்களாகும்.

இவ்வாறு பொருட் செல்வத்தைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

செல்வம் நிலையில்லாதது. இன்று ஒருவரிடம் உள்ள செல்வம் நாளை இல்லாமல் போய்விடலாம். நேற்றுப் பொருள் இல்லாமல் இருந்தவன் இன்று பெருஞ்செல்வந்தனாகலாம்.

இது கடவுளின் திருவிளையாடல். அதைவிடப் புதுமை யானது என்னவென்றால் செல்வங்கள் நிலையில்லாதவை. ஆனால் செல்வங்களால் செய்யப்படும் அறங்கள் நிலையானவை. அது போலச் செல்வங்களால் செய்யப்படும் பழிகளும் நீங்காதவை.

எனவே அறிவாளர்கள் செல்வம் இருக்கும் போது நிலையானவற்றைத் தேடிக்கொள்ளல் வேண்டும். அப்படித் தேடிக்கொண்டால் அவர்கள் எடுக்கும் பிறவிகளிளெல்லாம் செல்வம் கூடச் செல்லும்.

உலகம் அழிந்து கொண்டே இருக்கிறது. அதைத் தடுக்கக் கடவுளால் மட்டும் முடியும்.

விஞ்ஞானிகள் தம்மால் முடியுமென்று பலநூறு ஆண்டுகளாகக் கூறி வருகிறார்கள். ஆனால் சூறாவளி

அமெரிக்காவைத் தாக்கும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே தவிர எப்போது தாக்கும்? எப்படித் தாக்கும்?, அதனால் எவ்வளவு அழிவு உண்டாகும்? என்று அறுதியிட்டு அவர்களால் கூறமுடியவில்லை.

எரிமலைகள், பூகம்பங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. ஆனால் அதைத் தடுக்க முடியவில்லை. அத்துடன் எப்போது அதுவரும் என்றும் கூறவும் முடிவதில்லை.

இயற்கையை மனிதர்களை விட மற்ற உயிர்கள் சரியாகக் கணித்து வைத்துள்ளன. விஞ்ஞானம் உச்சமாக வளர்ந்துள்ள நாடுகளில் வாழும் மக்கள் அங்கு வாழும் உயிரினங்களை அவதானித்தே செயற்படுகின்றனர்.

மனிதன் மனிதாபிமானம் உள்ளவனாக வாழவேண்டும். அன்பு, இரக்கம், பிரதியுபகாரம் கருதாது உதவி செய்தல் வேண்டும். இவை மனிதாபிமானம் என்று சொல்லப்படுகிறது.

மனிதாபிமானம் உள்ளவனின் செல்வம் என்றும் நிலைத்திருந்து மற்றவர்களுக்கு உதவும்.

உலகம் மாயத் தோற்றத்தை உடையது.

உடல் மாயத் தோற்றத்தை உடையது.

உடல் நிலையில்லாதது என்று திருமந்திரம் கூறுகிறது.

“ஊரெல்லாம் கூடிஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே”

உயிர் உள்ளவரை தான் பெயர் இருக்கும். பின் அது பிணம். பிணமானபின் ஊரெல்லாம் கூடி அழுதுவிட்டுச்

சுடலையில் கொண்டு சென்று சுட்டுவிட்டு நீரில் மூழ்கிய பின் இறந்தவரின் நினைவுகள் இல்லாமல் போய்விடும்.

செல்வம் சந்திரனைப் போலத் தேய்ந்து மறையும் தன்மை கொண்டது என்று திருமந்திரம் கூறுகிறது. அத்துடன் தமது நிழலால் யாருக்கும் பயன் இல்லை. அது போல தம்மிடம் உள்ள செல்வத்தாலும் பயனில்லை என்றும் கூறுகிறது.

இளமை நிலையாமையைப் பற்றித் திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது.

“விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடை கொண்ட நீர் போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும் பொத்த காஞ்சிரங் காயும் ஒத்தேனே”

இளமையாக நான் இருந்த போது மெல்லிடையை உடைய பெண்கள் என்னை மணம் செய்ய விரும்பினர். அது கருப்பஞ்சாற்றைப் போல இனிமை தந்தது. முதுமை வந்த போது கரும்பினை ஒத்த மென்மையான முலையையும் ஆராய்ந்து அழகாக அமைக்கப் பெற்ற சிறந்த அணிகலன்களையும் பூண்டுள்ள பெண்களுக்கு முன்பு கரும்பாகக் காணப்பட்ட நான் காஞ்சிரங்காயாகக் காணப்படுகிறேன்.

அழகான ஒரு பெண்னை விரும்பி அவளை அடைபவன், அடையும் வரை தான் அவளில் மோகித்திருப்பான். அடைந்த பின் அவளில் உள்ள கவர்ச்சி குறைய ஆரம்பிக்கும். அதனால் அவன் கவர்ச்சியான இன்னொரு பெண்ணை நாட முயல்வான்.

இது இயற்கையானது. இதனால் தான் தாசிகளிடம் பலா் செல்கின்றனா். தாசியினதும் கவா்ச்சி குறைந்ததும் இன்னொருத்தியை அவனது மனம் நாடும்.

இதை உணா்ந்து தான் இந்து சமயங்கள் ஆசையை ஒழிக்குமாறு கூறுகின்றன.

வாழ்க்கை நிலையில்லாதது. இன்று வாழ்வது போல என்றும் வாழலாம் என்று நினைத்தல் கூடாது. அத்துடன் செல்வம் இன்பத்தைத் தருவது என்று நினைத்து ஆடம்பரமாகச் செலவு செய்யக் கூடாது. அது போலச் செல்வத்தால் தான் வாழ்க்கை நடக்கும் என்று நினைத்து அதைப் பாதுகாக்கவும் கூடாது.

ஒருவன் அளவுக்கதிகமான பொருளைச் சேமித்து வைத்து அதை உண்டு நுகராமல் இறந்து போனால், அவன் அந்தப் பொருளால் அடைந்தது எதுவும் இல்லை.

பொருளால் எல்லாவற்றையும் செய்யலாம் என்று கருதி யாருக்கும் எதுவும் உதவாமல் சோ்த்து வைத்திருக்கும் மயக்கமான அறிவுள்ளவனுக்குச் சிறப்பில்லாத பிறவி உண்டாகும்.

பொருள் சோ்ப்பதில் மிகுந்த பற்றுக் கொண்டு, புகழை விரும்பாமல் வாழ்கின்றவா்கள் பூமிக்குப் பாரமானவா்கள்.

பிறருக்கு உதவாமல் வாழ்வதால் ஒருவராலும் விரும்பப்படாதவன் ,தான் இறந்த பிறகு எஞ்சியிருப்பது என்று எதனை எண்ணுவான்.?

மற்றவா்களுக்கு மனம் மகிழ்ந்து கொடுக்காமலும், தான் அனுபவிக்காமலும் இருப்பவனுக்குச் செல்வம் கோடி கோடியாக வந்தாலும் ஒரு பயனும் உண்டாகப் போவதில்லை.

தானும் அனுபவிக்காமல், மற்றவர்கள் மகிழும்படியாக கொடுத்து உதவாமல் வாழ்கின்றவன், தான் வைத்திருக்கும் பெரும் பொருளுக்கு நோய் ஆவான்.

பொருள் கேட்டு வரும் வறியவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவாதவனுடைய செல்வம், மிகவும் அழகான தொரு பெண்மணமாகாமல் தனிமையாக வாழ்ந்து முதுமை அடைவதைப் போன்றது.

பிறருக்கு உதவாத காரணத்தினால் ஒருவராலும் விரும்பப் படாதவனுடைய செல்வம், ஊர் நடுவில் நச்சு மரம் பழுத்ததைப் போன்றது.

பிறர் மீது அன்பு செலுத்தாமல் தன்னையும் வருத்தி, அறத்தைப் போற்றாமல் சேர்த்து வைத்த இழிந்த பெரும் பொருளை மற்றவர்களே அனுபவிப்பார்கள்.

தான்தேடிய செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்துதவும் புகழ்பெற்ற செல்வந்தர்கள் சிறிது வறுமைப் பட்டால், அது உலகத்தைக் காக்கும் மேகம் வறுமைப்பட்டு மழை பெய்யாது விட்டதைப் போன்ற தன்மை உடையது.

இவ்வாறு பொருளைப் பற்றியும், அதைப் பயன்படுத்துவது பற்றியும், அதை நல்ல வழியில் பயன்படுத்தாமல் சேமித்து வைத்திருப்பதைப் பற்றியும் வள்ளுவர் கூறுகிறார்.

அருளைப் போலப் புகழும் நிலையானது. முன்னர் புகழ் பெற்று வாழ்ந்த பலர் இறந்த பின்பும் புகழுடன் மக்கள் மனதில் வாழ்கின்றனர்.

புகழைப் பற்றி வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

வறியவர்களுக்கு உதவி செய்து, அதன் மூலம் புகழ் பெற்று வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிர்களுக்கு நன்மை தருவது வேறொன்றும் இல்லை.

புகழ்ந்து சொல்கின்றவர்கள் சொல்பவையெல்லாம், வறுமையால் துன்பப்படுபவர் களுக்கெல்லாம் கொடுத்து உதவுபவர்களின் புகழைப் பற்றியே ஆகும்.

ஒருவன் பெறும் உயர்வு மிகுந்த புகழைத்தவிர, இவ்வுலகில் நிலையான பொருளாக அழியாமல் நிலை நிற்பது வேறொன்றும் இல்லை.

ஒருவர் இந்த உலகில் நிலைத்து நிற்கும் புகழைப் பெற்றால் வானுலகம் தேவரைப் போற்றாமல் புகழ் பெற்றவரையே போற்றும்.

ஒருவனது பொருள் குறையக் குறைய புகழ் வளரும். அவரின் உடல் அழிந்த பின்பும் புகழ் நிலைத்து நிற்கும். இந் நிலை அறிவிற் சிறந்தவர்களுக் கல்லால் மற்றவர்களுக்கு இல்லை.

தம்முடைய வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவர்களே உயிர் வாழ்கின்றவர்; புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவர்கள் உயிர் வாழாதவர்.

இப்படித் தான் வாழவேண்டும் என்று இந்து தர்மம் கூறுகிறது. இந்து தர்மம் வாழ்க்கைக்கென வகுத்த விதிகள் தான் இந்துக்களின் பண்பாடு. இதை நாகரிகம் என்று சொல்வார்கள்.

நாகரிகம் என்பது வியக்கும்படியாக வாழுதல்.

மற்ற இனத்தவர்கள் இந்துக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றைக் கண்டு வியப்படைகிறார்கள்.

செல்வத்தை எப்படித் தேடவேண்டும்?.

குடும்பத்தை எவ்வாறு நடத்த வேண்டும்?.

விருந்தினரை எவ்வாறு போற்ற வேண்டும்?.

பெற்றாரை எவ்வாறு மதித்தல் வேண்டும்?.

குருவை எவ்வாறு கௌரவிக்க வேண்டும்?.

மனைவியோடு எவ்வாறு உறவு கொள்ளல் வேண்டும்?.

பிள்ளைகளை எவ்வாறு வளர்த்தல் வேண்டும்?.

இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் விதியமைத்து வைத்துள்ளது இந்து மதம்.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் அனுபவிப்பவை எல்லாம் செல்வங்கள். அவை கடவுளால் மனிதர்களுக்குச் கென்று படைக்கப்பட்டவை. அவற்றை நல்ல முறையில் தேவையானளவு அனுபவித்தல் வேண்டும்.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகிவிடும்.

வயிறு நிறைய உண்டால் அன்று முழுவதும் வேலை செய்யச் சோம்பலாக இருக்கும்.

அளவுக்கதிகமான உணவு, கால தாமதம், மறதி, சோம்பல், நித்திரை ஆகிய நான்கையும் கொடுக்கும். அதனால் தான் இந்து தர்மம் அளவோடு உணவை உண்ணச் சொல்கிறது.

மனிதன் தேடிய செல்வங்களிலெல்லாம் தலை சிறந்தது உணவு. உணவுக்காகத்தான் உயிர்கள் அல்லற்படுகின்றன.

பசி என்ற ஒன்றை இறைவன் படைத்தமையாற்தான் உலகம் வாழ்கிறது.

அதனால் நன்மைகள் பல நடைபெறுகின்றன.

அதனால் தான் தீமைகளும் நடைபெறுகின்றன.

பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்பார்கள்.

இதனால் தான் ஒருவன் இரக்க வரும் போது அவனது முகத்தைப் பார்த்துத் தானம் செய் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வறுமை கொடியது அதைவிடக் கொடியது உலகில் எதுவும் இல்லை.

வறுமையை விரட்டுவது முயற்சி. முயற்சியில்லாதவனால் செல்வத்தைச் சேர்க்க முடியாது.

வறுமை என்று சொல்லப்படும் பாவி ஒருவனைப் பற்றிப் பிடித்தால், அவனுக்கு இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் இன்பம் இல்லாமல் போய்விடும்.

வறுமை என்று சொல்லப்படும் துன்ப நிலை வந்தால், பல்வேறு வகைப்பட்ட துன்பங்கள் அவனை வந்தடையும்.

வறியவர் நல்ல நூல்களில் பொருளை நன்றாகக் கற்றுணர்ந்து எடுத்துச் சொன்னாலும் அதைக் கேட்பதற்கு யாரும் இரார். அதனால் அவர் சொன்ன அந் நூற் பொருள் பயனற்றுப் போகும்.

ஒருவன் நெருப்பினுள்ளே தூங்க முடியும். ஆனால் வறுமைப்பட்டால் ஒருநாளாவது கண்மூடித் தூங்க முடியாது.

பொருள் இல்லாமையால் இரந்து அதைப் பெற்றுக் கொள்வோர் இல்லாது விட்டால், பொருள் கொடுத்துப் புகழ்பெறுவோரும் இல்லாது போவர்.

இவ்வாறு வறுமையைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

உணவு என்ற செல்வம் உயிர்களுக்கு அழகு, இளமை, அறிவு, கவர்ச்சி, பலம் போன்றவற்றைக் கொடுக்கும்.

செல்வம் தான் ஒரு மனிதனின் ஆசைகளைப் பூர்த்தி செய்கிறது.

செல்வந்தனான ஒருவனையே பெண் விரும்புவாள்.

அதற்குக் காரணம் செல்வத்தால் தான் அனைத்தும் கிடைக்கும்.

மிருகங்கள் தம் உடல் உணர்வுகளைத் தீர்த்துக் கொள்வது போல மனிதர்கள் தமது உணர்வுகளைத் தீர்த்துக் கொள்வது மட்டும் தான் வாழ்க்கை அல்ல.

கணவன், தனது மனைவியின் மனத்தைத் திருப்திப்படுத்துதல் வேண்டும். அதற்காக அவன் கட்டாயம் செல்வத்தை உடையவனாக இருத்தல் வேண்டும்.

உடல் ஆசை தீர்ந்ததும் மன ஆசை எழும். அதுவும் தீர்க்கப்பட வேண்டியதே.

கணவனின் உடலையும் மனதையும் திருப்திப்படுத்தும் மனைவி சகல செல்வங்களையும் பெற்றவள் என்று இந்து தர்மம் கூறுகிறது.

உடல் திருப்தியடைந்தால் அதன் பயனாக மனம் திருப்தியடையும். அதனால் நல்லதொரு குடும்பம் உருவாகும்.

நல்ல குடும்பத்தில் பிறக்கும் மக்களைச் செல்வம் என்று இந்து தர்மம் கூறுகிறது.

இல்லறத்தை நல்லறமாக்குவது புனிதமான இரண்டு உடல்களும் சேரும் உறவு.

இதை இல்லறம் என்கிறது இந்து தர்மம்.

இல்லறம் சிறந்தால் நல்லறமாகும்.

நல்லறம் எல்லாச் செல்வங்களையும் அளித்து மனித வாழ்வை மேன்மையடையச் செய்யும்.

மனிதன் தனது விதியைத் தானே அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்று இந்து மதங்கள் கூறுகின்றன.

“காலம் நம் கையில்” என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

காலத்தைத் தமக்கு எவ்வாறு சாதகமாக்கலாம் என்று இந்து தர்மம் கூறியுள்ளது.

ஒழுக்கமான அறவாழ்வு வாழ்பவன் தனது எதிர்காலத்தைத் திட்டமிட்டு வளம்படுத்திக் கொள்வான்.

அதனால் அவன் சகல செல்வங்களையும் தேடிக் கொள்வான். அதனால் செலவு செய்த செல்வம் அவனை மீண்டும் வந்தடையும். அதனால் அவன் என்றும் செல்வம் உடையவனாக வாழ்வான்.

இந்துக்களுக்குக் காலத்தின் மீது அதீத நம்பிக்கை உண்டு.

காலம் இரண்டு. ஒன்று நல்ல காலம். மற்றது கெட்டகாலம்.

ஒருவன் பிறந்த நேரம், திகதி, நாள் என்பவற்றை வைத்துக் கொண்டு தான் இரண்டு காலங்களையும் சோதிடர்கள் கணிக்கிறார்கள்.

பொதுவாக நல்ல காலம் என்பது கிரகங்கள் நல்ல வீட்டில் இருந்து நன்மை செய்வது.

கிரகங்கள் பகையான வீட்டில் இருந்தால் துன்பங்கள் வரும். இது கெட்ட காலம்.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த போதும் சோதிடத்தில் உள்ள நம்பிக்கை இந்துக்களுக்குச் சற்றும் குறைந்து விடவில்லை.

இந்துக்களை ஒன்பது கிரகங்கள் தான் ஆட்டிப் படைக்கின்றன.

சோதிடத்தில் 27 நட்சத்திரங்களும் 12 இராசிகளும் உள்ளன. இந்த நட்சத்திரங்களைக் கொண்டும் இராசிகளைக்

கொண்டும் தான் சோதிடர்கள் நல்ல காலத்தையும் கெட்ட காலத்தையும் கணிக்கிறார்கள்.

கெட்ட காலத்தில் உள்ளவர்களுக்குப் பொதுவாக சனி, செவ்வாய், ராகு, கேது, வியாழன் என்பன பகையான வீடுகளில் இருக்கும்.

இக்கிரகங்கள் பகையான வீடுகளில் இருந்தால் அவற்றைப் பிரீதிப்படுத்த என்னென்ன செய்ய வேண்டும் என்று இந்து தர்மம் கூறுகிறது. பொதுவாகப் பகையுள்ள கிரகங்களைப் பிரீதி செய்தல் வேண்டும். அதற்காக அக்கிரகங்களுக்கென ஒதுக்கப்பட்ட தினங்களில் விரதமிருந்து அர்ச்சனை செய்தல் வேண்டும்.

பகையான கிரகங்களுக்குப் பூசை செய்வதன் மூலம் அவற்றைத் திருப்திப்படுத்தலாம்.

தெய்வங்கள் எப்பொழுதும் மனிதர்களுக்கு உதவி செய்யவே இருக்கின்றன. சிலர் தெய்வங்கள் கொடூரமானவை என்றும், அவை மனிதர்களைத் தண்டிக்கும் என்றும் கூறுவார்கள்.

எனது வீட்டிற்கு அருகில் ஒரு வைரவர் கோயில் உள்ளது. அந்த வைரவர் மதிய வேளையிலும், மாலை வேளைகளிலும், நடுச்சாம வேளைகளிலும் வெளியே உலாவுவதாகவும், மனிதர்களைக் கண்டால் அவர் தாக்குவார் என்றும் நான் சிறுவனாக இருக்கும் போது எனது பேரனாரும் பேர்த்தியாரும் கூறுவார்கள்.

இதை நம்பிய நான் அக்கோயிற் பக்கம் செல்வதில்லை. வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விளக்கேற்றவும் நான் செல்வதில்லை.

எமது ஊரில் உள்ள கண்ணகி கோயிலிலும் இப்படியான ஒரு கதை உண்டு.

கண்ணகி மத்தியான வேளைகளில் வெளியே உலாவுவதாகவும், அங்கு மாடு மேய்க்கும் சிறுவர்களைக் கொண்டு பேன் பாப்பிப்பதாகவும் மக்கள் கூறுவர்.

கடவுள் பக்தர்களுக்கு அருள் செய்ய உலாவுவது புதுமையானது அல்ல. ஆனால் எந்தக் கடவுளும் பக்தர்களுக்குத் தீங்கு செய்யமாட்டார்.

நான் வளர்ந்த பின் எனது பேரனார் சொன்ன நேரங்களில் வைரவர் கோயிலுக்குச் செல்வேன். அவ்வேளைகளில் வைரவர் வெளியே வந்து உலாவினால் பார்க்கலாமென்று நினைப்பேன். ஆனால் அவரை இன்று வரை நான் காணவில்லை.

2007ஆம் ஆண்டு மேடராசிக்காரர்களுக்கு குருபகவான் எட்டாவது வீட்டிற்கு வந்துள்ளார். சனிபகவான் ஐந்தாவது வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். இதனால் துன்பங்கள் தான் உண்டாகும்.

இதற்குப் பரிகாரமாக வியாழக்கிழமைகளில் விரதமிருந்து குரு, தெட்சணாமூர்த்தி ஆகிய இருவருக்கும் கொண்டைக்கடலை மாலை, முல்லை மலர் மாலை, மஞ்சள் துண்டு என்பன சாத்தி அர்ச்சனை செய்யவும். சனிபகவானைப் பிரீதி செய்ய எள்எண்ணெய் எரிக்கவும். அன்று விரதமிருந்து ஆஞ்சனேயரையும், ஐயப்பனையும் வழிபடவும். விரதமிருந்து எள்ளுச்சாதம் சமைத்து காகங்களுக்குப் போடவும். இப்படிச் செய்து வந்தால் துன்பங்கள் நீங்கும். இவ்வாறு இந்து நூல்கள் கூறியுள்ளன.

கடவுளை நம்புபவர்கள் சமயம் கூறும் தத்துவங்களையும் நம்பவேண்டும். அத்துடன் சகல நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருந்து கொண்டு தான் கடவுளை வணங்குதல் வேண்டும். நீ கடவுளை நம்புவதன் அறிகுறி அது தான். உற்சாகமின்றி, மகிழ்வின்றிச் செய்யும் எந்தக் காரியமும் வெற்றியைத் தருவதில்லை. துன்பங்கள் பாவத்தினால் ஏற்படுகின்றன. எனவே பாவங்களைப் போக்க எண்ணுபவர்கள் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் கடவுளைப் பிரார்த்தித்தல் வேண்டும்.

ஒவ்வொரு உள்ளத்திலும் கடவுள் இருக்கின்றார். எல்லா உயிர்களும் கடவுளுக்குள் இருக்கின்றன. அப்படியிருக்க நாம் கடவுளைப் போற்றாது இருக்கிறோம். அதனால் தான் துன்பங்கள் வருகின்றன. கிரகங்கள் பகைக்கின்ற போது நம் உள்ளத்தில் இருக்கும் கடவுளை மகிழ்வுடன் போற்ற வேண்டும். அப்படிப் போற்றினால் கடவுள் எமக்குத் துன்பங்களை வரவிடமாட்டார்.

கிரகங்களும் நாம் வணங்கும் தெய்வங்கள் என்று ஒவ்வொருவரும் எண்ண வேண்டும்.

எதிரிகளையும் நேசிப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிரிகளால் துன்பமேற்படுவதில்லை.

கிரகங்கள் மனிதனின் எதிரிகளல்ல. கடவுள் நம்பிக்கையும், நல்லொழுக்கமும் கடவுள்களை மட்டுமன்றிக் கிரகங்களையும் கவரும். அதனால் கிரகங்களைப் பிரீதி செய்வோர்க்கு அவை துன்பத்தைத் தரா.

முருகனைச் சிறுவன் என நினைத்து அவனை வணங்காது செருக்கோடு சென்றமையால் தான் முருகன் நான்முகனைச் சிறையில் அடைத்தான்.

விநாயகரை வணங்காமல் சென்றதால் தான் வள்ளியைத் திருமணம் செய்ய முருகனுக்குத் தடையேற்பட்டது.

தவம் செய்து வரங்களைப் பெற்ற அசுரர் சிவனை விடத் தாம் பெரியவர்கள் என்று நினைத்தமையால் தான் அழிந்தனர்.

முருகனைச் சிறுவனென அவமதித்ததால் தான் சூரன் அழிந்தான்.

அதுபோலக் கிரகங்கள் பகைக்கும் வேளைகளில் அவற்றை வணங்கினால் அவற்றால் உண்டாகும் தீமைகள் இல்லாமல் போய்விடும்.

மார்க்கண்டேயருக்கு பதினெட்டு வயது வரை தான் ஆயுள் இருந்தது. இதை உணர்ந்த மார்க்கண்டேயர் சிவன் மீது பக்தி கொண்டு சிவனுடனே இருந்தார். அவரைக் கவர வந்த யமனைச் சிவபெருமான் காலால் உதைந்தார்.

மார்க்கண்டேயரைப் போலப் பக்தியுள்ளவனுக்கு எந்தத் துன்பம் வந்தாலும் கடவுள் அதை நீக்குவார்.

‘‘வினைப் பயனில் பற்று வைக்காது எப்பொழுதும் மகிழ்ச்சியும், திருப்தியும் உடையவனாகவும் எதையும் சாராதவனாகவும் இருப்பவன் கர்மம் செய்தாலும் கர்மம் செய்தவனாகான்’’

“ஆசைகள் அற்றவன், மனதையும் உடலையும் அடக்கியவன், உடமைகளைத் துறந்தவன், வெறும் உடலால் கடமை புரிபவன் பாவத்தை அடைவதில்லை” என்கிறது கீதை.

மனிதன் குடும்பத்தவனாக இருக்கலாம். அவன் தன் மனைவியின் மீது மோகம் கொண்டவனாக இருக்கலாம். அப்படி இருந்தாலும் அவன் ஒழுக்கமுள்ளவனாக வாழ்ந்தால் அவனுக்குத் துன்பங்கள் வராது.

விதி என்பது “பழம் வினை” அதாவது முன்பு செய்த வினை என்று சொல்வார்கள்.

இப்பிறப்பில் செய்த வினைகள் மறுபிறப்பில் தான் வந்தடையும் என்றில்லை. இப்பிறப்பிலும் வந்து சேரும்.

“முற்பகல் செய்யப் பிற்பகல் சூழும்” என்றொரு முதுமொழி உண்டு.

என்னைப் பொறுத்தவரை ஒவ்வொருவரும் செய்யும் தீமைகள் தான் கிரகங்கள் பகைக்கும் போது வந்து துன்பப்படுத்துகின்றன.

ஒருவன் ஒரு பசுவைக் கொன்றுவிட்டான். பின் மனச்சாட்சி அவனை வருத்தியது. அதற்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்பி ஒரு ஞானியிடம் சென்று தான் செய்ததைச் சொன்னான். அவர் சொன்னான்; “மகனே, நீ கொன்ற பசுவை உயிர்ப்பித்து விடு பாவம் போய்விடும்”.

புத்தரிடம் ஒரு பெண் சென்று, “எனது ஒரே மகன் இறந்துவிட்டான். என்னால் அவனது பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தயவு செய்து அவனை உயிர்ப்பித்துத் தாருங்கள்” என்று அழுதாள்.

அதற்குப் புத்தர் சொன்னார்; “அம்மா, நீ ஊரில் சென்று மரணம் நிகழாத வீட்டில் ஒரு பிடி கடுகு வாங்கிவா”

அந்தப் பெண் மகிழ்வுடன் அந்த ஊரில் உள்ள வீடுகள் எல்லாவற்றிற்கும் சென்றாள். எல்லா வீடுகளிலும் மரணம் நிகழ்ந்திருந்தது.

இது தான் வாழ்க்கை. பாவத்தை அனுபவித்தே தீரவேண்டும். விநாயகர் புராணத்தில் கூறியது போல இன்பத்தையும் துன்பத்தையும் விரும்பியவாறு அனுபவிக்கலாம்.

ஞானிகள், முனிவர்கள், தபசிகள், யோகிகள் காலத்தைத் தமது கைகளில் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதனால் தான் அவர்களால் முக்காலங்களையும் அறிய முடிகிறது. ஒருவன் துன்பப்பட்டுச் சென்றால், அத்துன்பத்துக்கு உரிய காரணங்களையும், அதை நீக்குவதற்கான வழி வகைகளையும் கூறுகிறார்கள்.

சோதிடம் சொல்பவர்கள், தம்மிடம் சோதிடம் கேட்க வருபவர்களின் காலத்தைத் தம் கையில் எடுத்து விடுகிறார்கள். அதனால் தான் சோதிடம் கேட்பவர்கள் அவர்களை நம்புகிறார்கள்.

சோதிடம் ஒரு கலை. அதைப் படித்தால் யாரும் யாவற்றையும் அறிந்து கொள்ளலாம். ஊரில் சோதிடம் சொல்பவர்கள் கல்வியில் பெரிய மேதைகள் அல்ல. பல சோதிடர்கள் மதுபானம் அருந்துபவர்களாகவும், தீமைகளைச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

சோதிடம் கற்பது மிகவும் இலகுவானது. அதைக் கற்று விட்டால் துன்பங்கள் எப்போது வரும் என அறிந்து கொள்ளலாம்.

அட்டமத்தில் வியாழன் உள்ள ஒருவர் சோதிடரிடம் சென்று தான் எப்போது வெளிநாட்டுக்குப் போகலாம் என்று கேட்கிறார்.

அவருக்கு இன்னும் எட்டு மாதங்கள் அட்டமத்தில் வியாழன் இருக்கிறார் என்று தெரிந்து கொண்ட சோதிடர் அந்த எட்டு மாதம் கழிய அவர் வெளிநாடு போவார் என்று கூறுகிறார்.

ஒன்பதாம் வீட்டில் இருக்கும் வியாழன் நல்ல பலன்களைக் கொடுக்கும். முன்பும் நான் இதை எழுதியுள்ளேன்.

சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன் ஆகியோர் ஒரு மாதத்தில் ஒரு ராசியைக் கடப்பர்.

வியாழன் ஒரு வருடத்திலும், சனி இரண்டரை வருடங்களிலும் ராகுகேது ஒன்றரை வருடத்திலும் ஒரு இராசியைக் கடப்பார்கள்.

வியாழனைப் போலவே ஒன்பது ராசிகளும் வீடு மாறும். அதைக் கணித்தால் பலன்களைச் சொல்லலாம்.

இதை விட்டுவிட்டுக் கிரகங்கள் தம்மைத் தொல்லைப் படுத்துமென்று நினைத்துத் துக்கப்பட்டு முயற்சிக்காமல் இருப்பவர்களே கஷ்டப்படுகிறார்கள்.

எனக்குக் காலம் கூடாது என்று சோதிடர்கள் கூறிய காலப்பகுதியில் தான் பெரும் பெரும் முன்னேற்றங்கள் உண்டாயின. அட்டமத்துச் சனி நடைபெறும் போது தான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவி கிடைத்தது. பதினெட்டு வருடங்களாக முடிவுறாத நிலையில் இருந்த பாடசாலையின் பொருள் கணக்கெடுப்பு நடைபெற்றது. இரண்டு வருட காலமாக வராதிருந்த சேவை நீடிப்பு வந்தது. இதற்குக் காரணம் எனது கடவுள் பக்தியும், முயற்சியும் தான்.

நான் கேட்டது எதையும் எனது குலதெய்வமான வெள்ளெருவைப் பிள்ளையாரும், நான் ஸ்தாபனம் செய்த நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியும் தராது விட்டதில்லை.

நான் அதிபராகக் கடமை புரியும் வேளைகளில் எவ்வளவோ நெருக்கடிகளும் இடையூறுகளும் வந்தன. பதினாறு வருட எனது அதிபர் சேவையில் வியாழ பகவான் பதினாறு முறை மாறியுள்ளார். சனிபகவான் ஆறு முறை மாறி இருக்கிறார். எனினும் எனக்கு எந்த இடையூறும் வரவில்லை. வந்தவையும் வந்தது தெரியாது சென்றுவிட்டன. அதற்குக் காரணம் காலம் அறிந்து நான் செயலாற்றியது தான்.

காக்கை தன்னை விட வலிமையுள்ள கோட்டானைப் பகலில் வென்று விடும்; அது போலப் பகைவனை வெல்லக் கருதும் அரசனுக்கும் அதற்கேற்ற காலம் வரவேண்டும்.

ஒருவன் காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல் என்பது, செல்வம் அவனை விட்டு நீங்காமல் கட்டிக் காக்கும் கயிறு போன்றது.

செயலை முடிப்பதற்கேற்ற கருவிகளுடன் காலத்தையும் அறிந்து செயற்படுபவனுக்குச் செய்ய முடியாத அரிய செயல் என்று எதுவும் இல்லை.

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து செயற்பட்டால், உலகமே வேண்டு மென நினைத்தாலும் அதுவும் கைகூடும்.

உலகத்தை வெல்ல நினைப்பவர்கள் அதைப் பற்றி எண்ணிக் கவலைப்படாது அதற்கு ஏற்ற காலத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பர்.

ஊக்கம் உடையவன் தகுந்த காலத்தை எதிர் பார்த்து அடங்கியிருப்பது, சண்டை செய்யும் ஆட்டுக்கடா தன் பகையை மூர்க்கத்துடன் தாக்குவதற்கு பின்னே செல்வதைப் போன்றது.

அறிவுடையவர்கள், பகைவர்கள் தமக்குத் தீங்கு செய்யும் போது கோபங் கொள்ள மாட்டார்கள்; பகவரை வெல்லும் காலம் பார்த்து அது வரை சினத்தை அடக்கி வைத்திருப்பார்கள்.

பகைவரைக் கண்டால் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்; அப்பகைவருக்கு அழிவு காலம் வரும்போது அவர்களது தலை கீழே விழும்.

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்பை நல்ல முறையில் பயன்படுத்திச் செய்வதற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

பெரிய மீன்வரும்வரை பொறுத்திருக்கும் கொக்கைப் போல அமைதியாக இருந்து, காலம் வாய்க்கும் போது கொக்கின் குத்துப் போல விரைந்து செயற்பட்டுக் காரியத்தை முடிக்க வேண்டும்.

இவ்வாறு காலத்தைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார். பகவத்கீதையைக் கிருஷ்ணர் மனித உருவில் வந்து உபதேசித்ததைப் போலச் சிவபெருமான் திருவள்ளுவர் என்ற பெயருடன் மனித உருவில் வந்து திருக்குறளை உபதேசித்தார் என்று தான் நான் நினைக்கிறேன்.

சைவ சமயத்திற்குச் சோதனை வந்த போது திருஞானசம்பந்தப் பெருமான் அவதரித்துச் சைவத்தையும் தமிழையும் காத்தது போல வேத உபநிடதங்களில் உள்ள அறக்கருத்துக்களை தமிழில் சொல்ல வள்ளுவர் அவதரித்தார்.

இதைவிட ஒரு செயலை எவ்வாறு செய்ய வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

செய்யும் செயலின் வலிமையையும், தனது வலிமையையும், பகைவனுடைய வலிமையையும், இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் ஆராய்ந்து செயற்படல் வேண்டும்.

தன்னால் செய்ய முடிந்த செயலையும், அதை எப்படிச் செய்ய வேண்டும். என்பதையும் அறிந்து செயற்படுபவனுக்கு முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

மற்றவர்களுடன் ஒத்துப் போகாமல், தனது வலிமையின் அளவையும் அறியாமல், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவில் கெட்டுப் போவான்.

மிகவும் மெதுமையான மயிலிறகைத் தன்னும் அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் அதன் அச்சு முறியும்.

ஒரு மரத்தின் நுனிக் கொம்பில் ஏறியவர், மேலும் ஏற முனைந்தால் அவருடைய உயிருக்கு அது ஆபத்தாய் முடியும்.

பிறருக்குக் கொடுக்கும் போது அளவு அறிந்து கொடுத்தல் வேண்டும்; அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும்.

உழைப்பால் வரும் வருமானம் சிறிதாக இருந்தாலும், செலவு செய்யும் வழி பெரிதாக இல்லாவிட்டால் தீங்கு இல்லை.

வருமானத்தின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை, வளங்கள் பல இருப்பது போலத் தோன்றினாலும் இல்லாமல் அழிந்து விடும்.

தன்னிடமுள்ள பொருளின் அளவை அறியாமல், மற்றவர்களுக்குக் கொடுப்பதால் ஒருவனது செல்வம் விரைவில் அழிந்து விடும்.

ஒரு தொழிலைச் செய்யும் போது தடைகள் வரும். அது காலத்தின் செயல் என்று நினைக்காது துணிவுடன் செயலைத் தொடருதல் வேண்டும்.

தமக்கு ஏற்ற இடத்தை அறிந்து, தம்மைக் காத்துக் கொண்டு, பகவரைத் தாக்கினால், வலிமை இல்லாதவனும் வலிமை பெற்று வெற்றியடைவான்.

செய்யும் செயல்களை நன்கு ஆலோசித்துத் தக்க இடத்தில் செய்தால், அஞ்சாமையைத் தவிர வேறு துணை தேவையில்லை.

சிறிய படையை உடையவனும் பொருத்தமான இடத்தில் பொருந்தி நின்றால், பெரிய படையை உடையவனது வலிமை அழிந்து விடும்.

வேலேந்திய வீரனைக் கண்டு அஞ்சாமல் வெற்றி கொண்ட யானை, சேற்று நிலத்தில் காலைப் புதைத்துச் சிக்கிக் கொண்டால் அதை நரி கொன்று விடும்.

வள்ளுவர் கூறியதை வேத வாக்காகக் கொண்டு செயற்படுபவனுக்குக் காலம் என்று ஒன்று இல்லை. அவனை எந்தக் கிரகமாற்றமும் பாதிக்காது. அவன் செயலைத் தொடங்கியதும் வெற்றிகள் வந்து குவியும்.

இனிக் காலம் என்னும் போது விதியையும் கணக்கில் கொள்ளல் வேண்டும்.

வள்ளுவர் விதியைப் பற்றிக் கூறிய போதும் ஏனைய அதிகாரங்களில் கடவுளின் கிருபையிருந்தால் எல்லாவற்றிலும் வெற்றி பெறலாம் என்றும் கூறுகிறார்.

பேரறிவாளனான இறைவனைத் தொழாதவனின் கல்வியாலும், நல்ல மனிதர்களை மதிக்காதவனின் கல்வியாலும் எந்தப் பயனும் இல்லை.

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் வராது.

இறைவனின் மகிமையை அறிந்து, அன்பு செலுத்துபவர்களைப் பிறவித்துயருக்குக் காரணமான நல்வினையும் தீவினையும் சேர்வதில்லை.

ஐம்பொறிகளால் உண்டாகும் ஆசைத் தீயினை அவித்த இறைவனின் பொய்யற்ற ஒழுக்கநெறியில் நிற்போர் என்றும் இன்பமாக வாழ்வர்.

தனக்கு ஒப்புவமை இல்லாத இறைவனது பாதங்களைச் சேராதவர்களுக்கு மனக்கவலையை மாற்றிக் கொள்ள முடியாது.

அறக்கடவுளான இறைவனுடைய திருவடிகளைச் சேராதவர்களுக்கு பொருள், இன்பம் ஆகிய பிற கடல்களை நீந்திக் கடக்க முடியாது.

கேட்காத செவி, பார்க்காத கண் என்பன போல் எண்குணங்களை உடைய இறைவனை வணங்காத தலையும் பயனற்றதாகும்.

இதிலிருந்து இறைவனை நினைத்துக் கொண்டு செய்யும் காரியங்கள் அனைத்தும் சித்திப்பதோடு, இறை அடியவர்களுக்கு எத்துன்பமும் வரமாட்டாது சேரும் செல்வமும் விட்டுச் செல்லாது. எந்நாளும் செல்வந்தர்களாக இருக்க விரும்புபவர்கள் மேற்சொன்ன வழிவகைகளைக் கைக்

கொள்ளுங்கள். இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக வாழலாம்.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00